No:52:06 Price : Rs:5.00

விடுதலைத் தூதன்
Herald of Deliverance

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

JUNE 2008

இயேசுவின் சீஷர்கள் செய்த தவறுகள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த அன்பின் நல்வாழ்த்துக்கள்.

ஜூன் மாதம் என்பது நம் நாட்டின் கல்வி ஆண்டின் துவக்கமாதம் ஆகு பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு பிரச்சினையின் மாதம் இது. பெற்றோர்கள் தங் பிள்ளைகளை எந்தப் பள்ளியில், எந்தக் கல்லூரியில், எந்தப் பாடத்தை மையமாகக்கொ சேர்ப்பது என்பது குறித்தும், பிள்ளைகள் தங்களது விருப்பப் பாடங்களை எப்பள்ளியில் சே படிப்பது என்பதுகுறித்துமுள்ள பல போராட்டங்களை இம்மாதத்தில் சந்திக்க வாய்ப்பு மட்டுமன்றி, நிதிநிலையை எண்ணி, பெற்றோர்களும் பிள்ளைகளும் அல்லற்பட்டு, கலங்குவ இயல்பே.

அன்பான பெற்றோர்களே! நம்முடைய தேவனின் பெயர்களுள் ஒன்று, "யேகோவாயி என்பதாகும் (ஆதி.22:14). ஆகவே, இது குறித்து கலங்காதிருங்கள்; நிச்சயமாகக் கர்த் பார்த்துக்கொள்வார். வேத வசனங்களைமட்டும் அனுதினமும் அறிக்கை செய்யுங்கள். நீ வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாகத் தேவன் கிரியை செ வல்லவராயிருக்கிறார்.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்றும் வேதம் கூறுகிறது.

மேலும், தேவனுடைய மற்றொரு வாக்குத்தத்தத்தை உங்களுக்கு நினைப்பூ விரும்புகிறேன். *"உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்ப உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோ எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன்"* (லூக்கா 1:71).

இது தேவனுடைய வாக்கோடுகூடிய கட்டளையுமாகும். தேவனுடைய பிள்ளைகளா நாம் தேவனுக்கு ஊழியஞ்செய்யவே அழைக்கப்பட்டுள்ளோம். இக்காலத்தில் நம்மு ஊழியத்தைக் கெடுக்க, அசைக்க, சத்துரு பலவிதங்களில் முற்படுவான். ஆனால் நாம் கல வேண்டிய அவசியம் இலலை. *"நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்க* என்று வேதம் சொல்லுகிறது அல்லவா? எனவே, பலவிதமான கலவரங்களும் துர்ச்செய்திக நமது ஊழியத்தைத் தடைப்படுத்தமுடியாது.

"நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அ இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்" (சங்.112:6,7) என்ற வேதவாக்கு உங்க உயிர்ப்பித்து, ஸ்திரப்படுத்தட்டும்.

பரிசுத்தத்தோடும், நீதியோடும், உண்மையோடும் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யுங் உங்களுடைய பரிசுத்தத்திலே புறஜாதிகள் இயேசுவைக் காணட்டும். உங்களுடைய நீதி உண்மையும் மக்களுக்கு அவரது சாயலை வெளிப்படுத்திக்காட்டட்டும். இயேசுவின் வரு சமீபமாக இருப்பதால் உங்களது நடக்கைகளினால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துங்கள்.

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு ந அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி.22:12) என்று கூறின இயேசு கிறி தாமதம்பண்ணார். விழிப்புடன் அவரது வருகையை எதிர்நோக்க, கர்த்தர் தாமே உங்களுக்குத் த கிருபைகளைத் தந்தருளுவாராக. ஆமென்.

அன்புள்ள

R. K. Sam

இயேசுவின் சீஷர்கள் செய்த தவறுகள்

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம்)

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது உலக முதுமொழி. 'குரு' என்பது ஆசிரியர்களைத்தான் பொருள்படுத்தும். இவர்களைத் தங்கள் தெய்வமாக எண்ணி, கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும் என்று மக்கள் கூறுவது இயல்பு. கிறிஸ்தவர்களுக்கோ தாயும், தந்தையும், ஆசான்களும் தெய்வங்கள் அல்லர்; அவர்களைக் கனப்படுத்துதல் வேண்டுமேயன்றி, தெய்வமாக எண்ணி வழிபடுதல் தவறு. இயேசு கிறிஸ்துவே உலகிற்குக் குரு—தெய்வம்—ஆவார். அவருக்கு அஞ்சி, கீழ்ப்படிந்து, அவரது கட்டளைகளின்படி நடத்தல் அவசியம்.

"*சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்*" (லூக்கா 6:40).

ஆம், நாம் நமது குருவாகிய இயேசுவைப்போல் காணப்படுவதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்து பஸ்கா பண்டிகைக்கு முன்பு தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவி, தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைத்தார். பின்னர், சீஷர்களை நோக்கிக் கீழ்க்கண்டவாறு கூறினார்:

"*நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.*

ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:13-15) என்றார்.

இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலிருந்து பரமேறிப்போவதற்கு முன்பு, "... *நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, ... உபதேசம்பண்ணுங்கள் என்றார்*" (மத்.28:19,20).

இயேசு கிறிஸ்துவின் கட்டளை என்ன? உலகின் மக்களைத் தம்முடைய சீஷர்களாக மாற்றவேண்டும் என்பதாகும். அதாவது, குருவாகிய தம்மைப்போலத் தமது பிள்ளைகள் உருவாகவேண்டும் என்பதைத்தான் அவர் வலியுறுத்தியுள்ளார். சீஷன் எவ்வளவுதான் தேர்ச்சிபெற்றாலும் குருவுக்கு மிஞ்சினவனாய் மாறமுடியாது. தம்மைப்போலத் தேர்ச்சியடைந்து முன்னேறும்படி தமது சீஷர்களைப் பயிற்றுவித்தார் இயேசு.

தேர்ச்சி என்பது முன்னேறுகிற ஒரு பயணம். இந்தத் தேர்ச்சியின் பருவத்திலே, பாதையிலே இயேசுவின் சீஷர்களிடத்தில் பல தவறுகள்—குறைகள்—காணப்பட்டன. குறை ஏற்பட்டுவிட்டதே என்றெண்ணி, இயேசுவைப் பின்பற்றுவோர் தங்களது ஆவிக்குரிய பயணத்தை நிறுத்திவிடக்கூடாது.

பாவங்கள் என்பதும், குறைகள் என்பதும் வெவ்வேறு பொருள்கொண்டவை. பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டாலும், கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிப் பாதையில் குறைகள் காணப்படுவது இயல்பு. இயேசு கிறிஸ்துவோடு வாழ்ந்த சீஷர்களும் இவ்விதத் தவறுகளைச் செய்துள்ளனர். அவர்களுக்குள் காணப்பட்ட சில தவறுகளைக் கீழே காண்போம். அவை, நம்முடைய வாழ்க்கையிலும் குறுக்கிட்டு, நமது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைப்படுத்தாது நம்மைக் காத்துக்கொள்ளுவோம்.

1. பயத்தினால் நடுங்கின சீஷர்கள்

"*அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி, ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள்*" (மத்.8:25).

"*கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்*" (மாற்கு 4:38).

இயேசுவோடு, அவரருகிலேயே வாழ்ந்துவந்த சீஷர்கள் இவர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

தம்முடைய சீஷர்களோடு கடலில் படகிலே பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது பெருங்காற்று வீசியதால் கடல் அலைகள் கொந்தளித்து, படகை நிரப்பிற்று. இயேசு கிறிஸ்து அதே படகில் பின்னணி யத்தில் தலையணையை வைத்து, நித்திரையா யிருந்தார் என்று மாற்கு சுவிசேஷத்தில் வாசிக்கி றோம். சீஷர்கள் அப்போது அவரை எழுப்பி, *"எங் களை இரட்சியும், மடிந்துபோகிறோம்"* என்றும், *"... நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில் லையா"* என்றும் கூறினர். இது எதனைக்காட்டுகின் றது? பயத்தால் நடுங்கும் அவர்களது தவறையே சுட்டிக்காட்டுகின்றது.

மற்றொருமுறை, இயேசு கிறிஸ்து தம்முடைய மூன்று சீஷர்களோடு மறுரூபமலைக்குச் சென்ற போது, அவரது முகம் பிரகாசித்ததையும் அவரோடே கூட மோசேயும் எலியாவும் பேசுகிறவர்களாகக் காணப்பட்டதையும் சீஷர்கள் கண்டனர். மட்டு மன்றி, *"... இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங் கள்"* (மத்.17:5) என்ற சத்தத்தையும் கேட்டனர். அப்போது அவர்கள் பயத்தால் நடுங்கி, முகங்குப்புற தரையிலே விழுந்துகிடந்தனர் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

இயேசுவின் சீஷர்களிடத்தில் காணப்பட்ட முதல்குறை, "பயம்" ஆகும். இயேசு கிறிஸ்து தங்க ளுடனேகூட, தங்களருகாமையிலேயே இருந்த போதும் சீஷர்கள் பயந்து நடுங்கினது ஆச்சரியமே. "என்ன நடக்குமோ?" என்ற திகில் சீஷர்களிடையே காணப்பட்டது.

அன்பானவர்களே! நீங்களும் நானும் அவர் களைப்போல மனிதர்கள்தான். நாம் இயேசுவின் சீஷர்களைக்காட்டிலும் எவ்விதத்திலும் சிறந்தவர் கள் அல்லர். *"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கி றேன்"* (மத்.28:20) என்று இயேசுதாமே கூறியுள் ளார். எனினும், சூழ்நிலைகளைக் கண்டு திகில் அடைகின்றோம்; கலங்குகின்றோம்.

"ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" (சங். 91:15) என்று கர்த்தர் கூறியிருந்தாலும், கடல் அலை களைப் போன்ற துன்பங்களைக் கண்டும் சூழ்நிலை களைக் கண்டும் பயந்து நடுங்குகின்றோம். மாமிசத் தில் வாழும் நமக்குப் பயமும், திகிலும், அவிசுவாச மும் எழுவது இயல்பே. அவரது வாக்கைக் குறித்த உணர்வு நம்முள் அற்றுப்போகின்றது. ஏன் இந்த நிலை? என்று அவரிடத்தில் பல கேள்விகளை கேட்கின்றோம்.

அன்பானவர்களே! *"அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்பட்டீர்கள்?"* என்று கூறின கர்த்தர் உங்களோடு இருக்கின்றார். இயேசு கிறிஸ்து தங்களோடேகூட தங்கள் படகிலே இருந்ததை அறியாமலும், உணரா லும் இருந்த சீஷர்களைப்போன்று நீங்களும் காணப் படாதிருங்கள். அவர்கள் தங்களைத் தனித்துநோக்கி யதுபோன்று, நீங்களும் உங்களைத் தனித்து நோக்கா திருங்கள். பயந்து நடுங்கும் சீஷர்களாய்க் காணப் படாதிருங்கள். தேவனைக் குறைகூறாதிருங்கள்.

அருமையானவர்களே! இயேசுவின் சீஷர்களி டம் காணப்பட்ட, "பயம்" என்ற தவறு உங்களில் காணப்படுகின்றதா? ஆராய்வீர்களாக.

2. தவறாய்ப் புரிந்துகொண்ட சீஷர்கள்

"அவர் கடலின்மேல் நடந்து, அவர்களி டத்திற்கு வந்தார்.

அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்" (மத்.14:25,26).

இச்சம்பவமும் முந்தின சம்பவத்தைப் போலத் தான் காணப்படுகின்றது. பயப்படுகின்ற சீஷர்கள் என்று இவர்களை அழைக்காமல், தவறாய்ப் புரிந்து கொண்ட சீஷர்கள் என்று அழைப்பது சாலப் பொருந்தும். இவர்களும் இயேசுவோடு வாழ்ந்தவர் களே.

இயேசு கிறிஸ்து, தம்முடைய சீஷர்களை தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அனுப்பி னார் (மத்.14:22). இதன் மறைபொருள் என்ன? தா அவர்களுக்குப் பின்னாக அங்கு வருவதாக பொருள்படுகிறதன்றோ? இதனைச் சீஷர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் தம் சீ

அனுப்பினபின்பு, தாம் அருகிலிருந்த ஒரு மலையின்மீது ஏறி, தனித்து ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். தம் சீஷர்கள் கடுங்காற்றை— பெருங்காற்றை—சந்திக்க நேரும் என்றுணர்ந்து, அதிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ளும்படியாக, பிதாவிடம் பரிந்துபேசிக்கொண்டிருந்திருப்பார்.

ஆம், நடுக்கடலிலே தமது சீஷர்கள் தத்தளித்துக்கொண்டிருந்ததைக் கண்டார். இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கிறிஸ்து கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்குச் சென்றார். யூதர்களின் கணக்கின்படி நான்காம் ஜாமம் என்று சொல்வது அதிகாலை மூன்று மணி முதல் ஆறுமணிவரை ஆகும். இந்த நேரம் மக்களுக்குத் தூக்கம் மிகுதியாக வரும் நேரமாகும். நமக்கு உதவும்படி காத்திருக்கும் இயேசு கிறிஸ்துவோ தூங்குவதே இல்லை. எந்நேரத்திலும் தம் பிள்ளைகளின் நலனைக் கரிசனையோடு எண்ணிக்கொண்டிருப்பவர்.

கடலின்மேல் நடந்துவரும் இயேசுவைக் கண்ட சீஷர்கள் என்ன கூறினர்? *"ஆவேசம்"* என்று கதிகலங்கி அலறினர். காற்றையும் கடலையும் பொருட்படுத்தாமல் தங்களுக்கு உதவ வந்த இயேசுவைத் தவறாகப் புரிந்துகொண்டனர் சீஷர்கள். தங்களை நோக்கி நடந்து வருகிறவர் தேவாதி தேவனின் திருக்குமாரன் என்பதை அவர்கள் அறிந்திலர்.

உதவ வரும் தேவாதி தேவனை, "சாத்தானின் ஆவி" "பிசாசு, ஆவேசம்" என்று எண்ணி, தவறாகப் புரிந்துகொண்ட சீஷர்களையும் இயேசு கடிந்துகொள்ளாமல் அன்பாகத் தம்மைப் புரிந்துகொள்ளும்படி நிரூபித்துக்காட்டினார்.

அன்பானவர்களே! சாத்தியமற்ற சூழ்நிலைகளில் உங்களுக்கு உதவும்படியும், உங்களது நன்மையைக் கருதும்படியும் இயேசு கிறிஸ்து உங்களருகில் வருவார். சீஷர்கள் தவறாகக் கற்பனை செய்து, புரிந்துகொண்டதுபோல நீங்களும் இயேசுவைத் தவறாகப் புரிந்துகொள்ளாதிருங்கள். உங்களது சொந்த அறிவின்படி செயல்படாதிருங்கள்.

இயற்கையும் விஞ்ஞானமும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் உங்களுக்கு உதவிசெய்பவர் இயேசு கிறிஸ்து. உங்களை ஆசீர்வதிக்கும்படி இயற்கை விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் அவர் மாற்ற வல்லவர். இருளோ, வெளிச்சமோ, இரவோ, பகலோ எல்லா நேரமும் அவருக்கு ஒன்றுபோலத் தான் காணப்படும். அவர் வாக்கு மாறாதவர் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அன்றுமட்டுமல்ல, இன்றுங்கூட இயேசு கிறிஸ்து உங்களுக்காகத் தம் பிதாவிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் இயேசுவின் செயல்களைத் தவறாகப் புரிந்துகொள்ளும் சீஷர்களா, சீஷிகளா? ஆராய்வீர்களாக.

3. குற்றங்காணும் நோக்கமுடைய சீஷர்கள்

"அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து: இந்த வீண்செலவு என்னத்திற்கு?" (மத். 26:8) என்றனர்.

இயேசுவோடு உண்டு, உறங்கி ஒன்றித்து வாழ்ந்தும் சீஷர்கள் தவறு செய்ததை இங்குக் காண்கிறோம். மேற்கூறப்பட்ட சொற்கள் பணப்பையைத் தன்னிடம் வைத்திருந்த இயேசுவின் சீஷனான யூதாசின் சொற்கள் ஆகும். அவன் பணப்பையை வைத்திருந்த பொருளாளனாக விளங்கினதால், அவர்களுக்குள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்தவனாகக் கருதப்பட்டிருந்திருப்பான். அவன் மற்றவர்களை நோக்கி, ஒரு கேள்வி கேட்டான். என்ன கேள்வி அது? *"இந்த வீண் செலவு என்னத்திற்கு?"*

இத்தகைய சீஷர்களுக்கு என்ன பெயர் கொடுப்பது? குற்றங்காணும் நோக்கமுடைய சீஷர்கள் என்று கூறுவது சாலவும் ஏற்புடைத்து. பெத்தானியாவிலே குஷ்டரோகியாய் இருந்த சீமோன் வீட்டிலே இயேசு கிறிஸ்து போஜனபந்தியிருந்தார். அப்போது ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள ஒரு வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, பந்தியிருந்த அவரது சிரசின்மேல் ஊற்றினாள். அப்போது தான் யூதாஸ், *"இந்த வீண் செலவு என்னத்திற்கு?"* என்றான்.

சீஷர்கள் கண்ட இதே நிகழ்ச்சியை இயேசுவும் அங்கே கண்டுகொண்டிருந்தார். தம்முடைய அடக்கத்திற்கு அடையாளமாக அவள் இதைச் செய்தாள் என்பதை அவர் அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்துவுக்

குள் காணப்பட்ட இந்தப் பகுத்தறிவின் ஆவியைச் சீஷர்கள் பெற்றிலர். அவர்கள் தங்களது மாமிசக் கண்ணோட்டத்தோடு இதனைக் கண்டனர். இது வீண் செலவில்லை என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்.

இயேசுவைக்காட்டிலும் அதிக பக்திவைராக்கியம் கொண்டவர்கள்போல சீஷர்கள் நடித்தனர். பணப்பையை வைத்திருந்த யூதாசும் ஏழைகளின் மீது மிகுந்த இரக்கம் கொண்டவன்போல நடித்தான். சிறந்த மாய்மாலக்காரன் அவன்.

அந்தத் தைலத்தை விற்றால் தனது பணப்பை நிரம்புமே என்பதுதான் அவனது கவலையும் கற்பனையுமாகும். இங்குச் சீஷர்கள் தங்களுடைய சுய நீதியை வெளிப்படுத்திக்காட்டினர். ஆவிக்குரிய கண்ணோட்டம் அவர்களுக்கில்லை. மாய்மாலங் கொண்ட சுயநீதியைக் கொண்டவர்கள் அவர்கள்.

அன்பானவர்களே! சுயநீதியின் அடிப்படையில் சீஷர்கள் செயல்பட்டது உங்களுக்கோர் எச்சரிப்பாய் அமையட்டும். நீங்கள் குற்றங்காணும் நோக்கமுடைய சீஷர்களா, சீஷிகளா? என்று உங்களையே உய்த்து ஆராய்வீர்களாக.

4. செயல்படச் சக்தியற்ற சீஷர்கள்

"அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்" (மத்.17:16).

இயேசுவோடேகூட வாழ்ந்த சீஷர்களின் சக்தியற்ற நிலையை இங்குக் காண்கிறோம். சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்பட்டுக்கொண்டிருந்த தனது மகனைச் சுகமாக்கும்படியாக இயேசுவினுடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தான், ஒரு மனிதன். அவனது மகன் அடிக்கடி தீயிலும், தண்ணீரிலும் விழுந்து கொடிய வேதனைப்பட்டு வந்தான்.

இயேசுவின் சீஷர்களாலேயோ அவனைச் சுகப்படுத்த முடியவில்லை. இவர்களை என்னவென்று பெயரிட்டு அழைப்பது? செயல்படச் சக்தியற்ற சீஷர்கள் என்று அழைப்பது ஏற்புடைத்தன்றோ?

தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்காகத் தி... படுத்தி அனுப்புகையில், இயேசுகிறிஸ்து, *"... பர... லோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்... யுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்;..."* (மத்.10:7,8) என்றார்.

இவ்வூழியங்களை நிறைவேற்றுதற்குரிய சக்தியைக் கொடாமல் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை அனுப்பியிருப்பாரா? தாம் அவர்களுடன்கூட இருந்து தமது வார்த்தைகளை நிறைவேற்றுபவரல்லவோ அவர்.

இயேசு கிறிஸ்துவினிடத்தில் சந்திரரோகியான தனது மகனை அழைத்துவந்தான் அம்மனிதன். இயேசு கிறிஸ்து பிசாசை அதட்டினார். அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான். சீஷர்கள் இயேசுவினிடம் வந்து, *"அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள்"* (மத். 17:19).

"அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலே தான்;" என்று கூறினதுமட்டுமன்றி, *"... இந்த ஜாதி பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்"* (மத்.17:20,21).

சீஷர்களிடையே இருந்த ஜெபமின்மை, உபவாச ஜெபமின்மை இவற்றை எடுத்துக்காட்டினார் இயேசு. மட்டுமன்றி, உபவாச ஜெபத்தின் முக்கியத்துவத்தையும், அவர்களது அவிசுவாசத்தையும் சுட்டிக்காட்டினார்.

"என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (யோவான் 14:12) என்று இயேசு கூறியுள்ளார்.

அன்பானவர்களே! உங்களுக்குள்ளே ஒரு கேள்வியைக் கேட்பீர்களாக. "நான் செயல்படச் சக்தியற்ற சீஷனாய், சீஷியாய் இப்போது காணப்படுகின்றேனா? உங்களையே தற்பரிசோதனை செய்யுங்கள். உங்களது தனித்தன்மைகளை—சிறப்புத் தன்...

—ஆராய்ந்துபாருங்கள். உங்களுடைய வரங்—திறமைகள்—யாவை? ஆராயவும். செயல் சக்தியற்ற இயேசுவின் சீஷர்களுள் ஒருவனாக, ...த்தியாகக் காணப்படாதிருங்கள். விசுவாசத்... உபவாசித்து ஜெபியுங்கள்.

5. வெதுவெதுப்பான நிலையிலுள்ள சீஷர்கள்

"பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்... நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை ...க்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோ...கூட விழித்திருக்கக்கூடாதா?" (மத்.26:40) ...றார்.

இங்கு நாம் காண்கின்ற குறைகள் அனைவும் ...சுவின் சீஷர்களைக் குறித்தவைகளே. பொது...களைக்குறித்தோ அன்றி, புறஜாதியினரைக் ...றித்தோ அல்ல. இயேசுவோடுகூட நெருங்கி ...ந்த சீஷர்களைப்பற்றினவைகளே. இவர்கள் அப்...ஸ்தலர்கள் என்றுங்கூட பெயர்பெற்றிருந்தனர். ஜெபிக்கவேண்டிய நேரத்தில் தூங்குகிற இந்த சீஷர்...ளை எவ்விதம் அழைப்பது? இவர்கள் லவோதிக்... சபையினரைப்போன்று காணப்பட்டவர்கள். ...ளை அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்...ன நிலையில் வாழ்ந்த சீஷர்கள் ஆவர்.

இயேசு கிறிஸ்து, தாம் சிலுவையில் அறையப்...ம்வேளை வந்தபோது பேதுரு, யாக்கோபு, ...யான இவர்களை அழைத்து *"... நீங்கள் இங்கே ...கி, என்னோடேகூட விழித்திருங்கள்"* என்று ...களுக்குக் கட்டளை கொடுத்து, சற்று அப்புறம் ...ய, *"என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை ...டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்;"* ...று கூறி ஜெபித்தார். ஆனால், அம்மூன்று சீஷர்க...ள் செய்தது என்ன? இயேசுவின் கட்டளைக்குச் ...விகொடாமல் தூங்கிக்கொண்டிருந்தனர். *"பின்பு, ...வர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை ...ண்ணுகிறதைக் கண்டு,"* (மத்.26:40) என்று ...தம் கூறுகிறது.

அன்பானவர்களே! நீங்கள் ஜெபிக்கவேண்டிய ...ரத்தில் தூங்குகிறீர்களா? பெந்தெகொஸ்தே விசுவாசிகள் தங்கள் ஜெபநேரத்தை ஒழுங்காகக் கடைப்பிடித்து ஜெபிக்காமல் தூங்குவது, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு தவறாகும். சில நல்ல விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் ஜெபம் என்று சொல்லி முகங்குப்புற விழுந்து தூங்குகின்றனர்.

"நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா?" (மத்.26:40).

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" (மத். 26:41).

சோதனையிலிருந்து தப்பிக்கொள்ளவேண்டுமானால், தேவனுடைய பிள்ளைகள் ஒருமணிநேரமாவது ஜெபிக்கவேண்டும். குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் என்று இயேசு கிறிஸ்துவே நிர்ணயித்திருப்பதை இங்குக் கவனிக்கவும். மாமிசம் பெலவீனமாயிருக்கிறது என்று கூறி, தூங்கச் செல்லாதிருங்கள். பெலவீனத்தை, வியாதியை வேதவசனத்தால் மேற்கொள்ளுங்கள்.

அருமையானவர்களே! நீங்கள் ஜெபிக்கிற சீஷர்களா, சீஷிகளா? அன்றி, வெதுவெதுப்பான நிலையில் காணும் சீஷர்களா? ஆராயவும்.

6. உறுதியற்ற சீஷர்கள்

"ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது, சீஷர்களெல்லாம் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" (மத்.26:56).

இயேசுவைவிட்டு ஓடிப்போன சீஷர்களைக் குறித்து இங்குக் காண்கிறோம். இவர்கள் யார்? உறுதியற்ற—ஸ்திரமற்ற—சீஷர்கள் ஆவர். இயேசு கிறிஸ்து, தாம் காட்டிக்கொடுக்கப்படுவதற்கு முன்பு, *"இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்"* (மத்.26:31) என்றார்.

"அதற்குப் பேதுரு: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" (மாற்கு 14:29) என்றான். அவன் தன்னைத்தானே உயர்த்தி, மெச்சிப்பேசினான். மேலும், *"ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்"* (லூக்கா 22:33) என்றான்.

இவ்விதம் பேசின சீஷனும், மற்றவர்களும் பரீட்சை ஏற்பட்டபோது இயேசுவைவிட்டு ஓடிப்போனார்கள். அன்பானவர்களே! உங்களுக்கும் சோதனைகளும், பரீட்சைகளும் நிச்சயமாய் வரும். இயேசுவுக்காக உயிரையே கொடுக்கும் நேரமும் வரலாம். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? இயேசுவைவிட்டு ஓடிப்போகும் உறுதியற்ற சீஷர்களாய், சீஷிகளாய்க் காணப்படப்போகிறீர்களா? அன்றி, இயேசுவுக்காக உறுதியோடு நின்று, உயிரையும் கொடுக்கும் விசுவாசிகளாய்த் திகழப்போகிறீர்களா?

பழைய ஏற்பாட்டுக் காலத்திலே எஸ்தர் இராஜாத்தி, தன்னுடைய ஜனங்களை மீட்க, இராஜாவின் சட்டத்தைமீறி, இராஜ அரமனைக்குள் பிரவேசித்தாள். பவுல் அப்போஸ்தலன், *"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?"* என்று அறைகூவினான்.

உருவ வழிபாடு தவறு என்று கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களை எச்சரித்த மார்டின் லூத்தரை, அந்நாளில் வாழ்ந்த கத்தோலிக்கக் குரு, மரப்பலகையிலே கட்டி வைத்து, எண்ணெய் ஊற்றி உயிரோடு கொளுத்த முற்பட்டு, ஒரு கேள்வியைக் கேட்டார்.

"உன்னுடைய தேவனுடைய கொள்கையை விட்டுவிடு; இன்றேல் உன்னை இப்போது சுட்டெரிக்கப்போகிறோம்" என்றார்.

அதற்கு மார்டின் லூத்தர், "என்ன வந்தாலும் வரட்டும்" என்று கூறி ஒரு பாடலைப் பாடிக்கொண்டிருந்தார். அப்போது அவரைச் சுட்டெரித்தனர். அவர் அவ்விதமாகவே பரலோகம் சென்றடைந்தார்.

அன்பானவர்களே! நீங்கள் எவ்விதமான சீஷர்கள்? உறுதியற்ற—ஸ்திரமற்ற சீஷர்களா? ஆராய்வீர்களாக.

7. சுயசித்தத்தின்படி செயல்பட்ட சீஷர்கள்

"அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொ[illegible] படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்[illegible] கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டி[illegible] கள்" (மாற்கு 10:13).

இயேசுவோடேகூட இருந்தவர்கள் செய்த ம[illegible] மோர் தவறை இங்குக் காண்கிறோம். தங்களது பி[illegible] ளைகளை இயேசு கிறிஸ்து தொட்டு ஆசீர்வதிக்[illegible] படி, பெற்றோர்கள் அவரிடத்தில் கொண்டுவந்த[illegible] அவ்விதம் கொண்டுவந்தவர்களைச் சீஷ[illegible] தடுத்து, அதட்டினார்கள்.

பிள்ளைகள்மீது இயேசுவின் கரம்பட்டா[illegible] அன்றி, அவர் தொட்டாலோ அது மேன்மை[illegible] சிறந்ததொன்றாகக் கருதினர் பெற்றோர். அத[illegible] இயேசுவை நெருங்கினர். தங்கள் எஜமான்—கு[illegible] மிகவும் களைப்பாய் இருக்கிறார் என்று கூறி, அ[illegible] களை இயேசுவிடம் வர அனுமதிக்கவில்லை சீ[illegible] கள். இவர்கள் யார்? தங்களது சுயசித்தத்தை நி[illegible] வேற்றும் சீஷர்கள் ஆவர்.

சுய சித்தம் என்பதன் பொருள் என்ன? மற்ற[illegible] கள் பயனடைதல் கூடாது என்பதாகும். எல்லா[illegible] றையும் அறிந்தும் தங்களது எண்ணங்கள்மட்டு[illegible] நிறைவேறினாற்போதும் என்று எண்ணுபவர்க[illegible] இவர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள். மிகு[illegible] பெருமிதம்கொண்ட சீஷர்கள். மற்றவர்களது ஆ[illegible] வாதங்களைத் தடுத்து நிறுத்துபவர்கள். தாங்கள்ம[illegible] டும் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று அ[illegible] விக்கவேண்டும் என்றுள்ள தன்னலமிக்கக் கு[illegible] படைத்த சீஷர்கள் இவர்கள்.

அன்பானவர்களே! நீங்கள் சுயசித்தத்தை நி[illegible] வேற்றும் இயேசுவின் சீஷர்களா? அன்றி, பிறர் ந[illegible] கருதும் சீஷர்களா? மற்றவரது ஆசீர்வாதங்களை[illegible] தடுத்து நிறுத்தும் தன்னலமிக்க சீஷராயிராதே[illegible] கள். உங்களது தவறுகளைத் திருத்திக்கொள்ளு[illegible] கள்.

இயேசுவின் சீஷர்கள் செய்த ஏழுவிதத் தவ[illegible] கள் உங்கள் வாழ்விலும் ஏற்படாவண்ணம் காத்[illegible] வாழுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதி[illegible] பாராக.

BLESSINGS TO THE ANOINTED PEOPLE OF GOD

(Pastor M.K.Sam Sundaram)

"But my horn shalt thou exalt like the horn of an unicorn: I shall be anointed with fresh oil" (Psalm 92:10).

Psalm 92 is called, "A Psalm or Song for the sabbath day." (Sabbath is defined as the day of rest, Saturday for Jews and Sunday for Christians). We gather together to worship on Sundays because Sunday is the day of the resurrection of Jesus and also because it is a day convenient for every one. In fact, we can worship the Lord on any day and every day as the Lord delights in our worship. In Arab countries they have worship services on Fridays. Unlike in the Old Testament days, in the present age we do not give importance to the day. We gather together to worship Him in spirit and this spiritual worship gives us rest in the soul. Speaking about this rest, the writer says that the Lord will exalt him like the horn of a unicorn and anoint him with fresh oil (v.10).

The word 'anointed' made me meditate on the blessings that the Lord gives to His anointed children. We read in the Old Testament how only priests, prophets and kings were anointed but in the present age we see that the anointing is a privilege which all the followers of Jesus Christ can enjoy. The Bible says that we are kings and priests, and, undoubtedly, we are so in the spiritual sense. Therefore, we are also anointed as those three categories of people were anointed.

On the day of Pentecost Peter said, *"For the promise is unto you, and to your children, and to all that are afar off, even as many as the Lord our God shall call"* (Acts 2:39). According to Peter's words we who live in the New Testament age are privileged people, because we are blessed with the anointing of the Holy Spirit. In the Old Testament period priests, prophets and kings were anointed with oil, but in the New Testament we read that God anointed Jesus with the Holy Ghost. After the resurrection and ascension of Jesus, however, the Holy Spirit was first poured on the disciples, and later, on all those who believed in His resurrection and confessed it in faith.

We read the word 'anoint' for the first time in Genesis 31:13. In Genesis 28:18 we see that Jacob set up as a pillar the stone he had used as a pillow and poured oil on top of it. In Genesis 31:13 the angel of the Lord used the word 'anointed' when he said to Jacob, *"I am the God of Bethel, where thou anointedst the pillar ..."* From then on Jacob began to receive the blessings of God, and so shall we if we covet the marvellous experience of anointing and get filled afresh with it every day.

I wish to talk to you about the seven blessings that the anointed people of God receive, confining my study to the people in the Old Testament but taking a few illustrations from the New Testament.

God exalts the horns of the anointed

"The adversaries of the LORD shall be broken to pieces; out of heaven shall he thunder upon them: the LORD shall judge the ends of the earth; and he shall give strength unto his king, and exalt the horn of his anointed" (I Sam.2:10).

In the verse quoted we find a blessing being mentioned and that is, the horns of the anointed will be exalted. It means, God's anointed people will be honoured.

In I Sam.2:1-10 we find Hannah's prayer which is in the form of a song. In verse 10 Hannah mentions 'his king'. The word 'king' refers to David, and therefore it is a prophecy about Jesus Christ. But, in verse 1 we find that it is Hannah's experience because she says her heart rejoices in the Lord and that her horn is exalted. This experience of Hannah's joy on her

horn being exalted can be taken as the experience of believers who are anointed, especially those who traverse the path of tribulation and grief which Hannah went through. Now, what was the cause of Hannah's grief?

Elkanah, Hannah's husband had another wife named Peninnah. Peninnah, Hannah's adversary and rival, had children, whereas Hannah had none. Whenever Peninnah provoked and irritated her, Hannah felt humiliated and hurt and therefore wept bitterly. It was a life of agony for Hannah because her rival lived with her in the same house and her taunting words pierced Hannah's heart and made her lose her peace and weep. Even the loving words her husband spoke to her could not pacify her. She did not eat or drink but was immersed in sorrow.

At one such moment she sought the comforting presence of the Lord. She humbled herself before God and poured her heart out in the long prayer she prayed. When only her lips moved and no sound was heard, Eli the priest naturally thought she was not sober. But Hannah explained to him her position and then Eli said, "Go in peace."

Hannah knew that God's anointing rested on her, and therefore she said her horn was exalted. (Since she is referring to her horn here, it is not a prophecy concerning Jesus Christ and David).

Hannah prayed for a child and God answered her prayer. He gave her a child whom she had vowed she would offer to the Lord to serve Him. Her child Samuel grew up in the temple of God and became a prophet of the Lord. It is said in I Sam.3:20 that he was established as a prophet of the Lord from Dan unto Beersheba. God used him to anoint Saul the first king of Israel. Later, Samuel anointed David. It's through Samuel the prophet Hannah's son, that the horn of Hannah was exalted. If you believe in the power of the Holy Spirit, who anoints you, your horn will also be exalted.

God gives mercy and grace to His anoint

"Great deliverance giveth he to his king and sheweth mercy to his anointed, to David and to his seed for evermore" (Ps.18:50).

It's God who anoints the people of H choice and when He anoints them, He giv His mercy and grace not only to them but th progeny as well. When God's anointing re upon them, they become His anointed and t anointing helps them to lead a righteous li with an eternal purpose. It is said that God anointed and their seed receive His mercy. Th can be seen in the way David was blessed w God's mercy and grace and so were h descendants till the birth of Jesus Christ, wh was of the geneology of David. Thus we se how the words in Ps.18:50 *"mercy to th anointed, to David and his seed for ever more"* came true.

Psalm 89:20 says that God had foun David His servant and anointed him with h holy oil. There again we find that God's mer was upon him and his seed (vv.28,29). Verse 10-36 of the psalm describe beautifully th mercy God gives to His anointed. David say his enemies will be slain because God in H mercy and faithfulness will besiege them. Dav was given another blessing also and that wa even when his children went astray, God woul chastise them, forgive them and show them H mercy. If David's children forsook God, H would visit their transgression but would sho them His mercy. In short, the posterity of Dav would endure for ever (v.36). So, Go established and strengthened David's kingdom

Dear child of God, the promise which Go gave to David will hold good for you if you ar anointed. You may be worried about th spiritual growth of your children. Have the gone astray? Do they refuse to attend chur with you? Have they fallen into bad compan

Also, cling to the promise God gave to David and his descendants. God may chastise your children, but He will never forsake them. He will be merciful to them, and forgive them each time they repent of their sins. You will see the day when your children seek the Lord's face and you will certainly rejoice over it.

God Saves His anointed

"Now know I that the LORD saveth his anointed; he will hear him from his holy heaven with the saving strength of his right hand" (Ps.20:6).

The word 'save' in this psalm is not used in the sense of forgiveness of sin resulting in salvation. Here David says that the Lord saves the anointed from danger.

The life of every human being is beset with danger and no one can be free from it. But when an anointed child of God finds himself in danger, he cries out to the Lord and the Lord hears his cry and comes at once to deliver him. In Psalm 20 we find how David was in trouble and in great distress. He prayed to the Lord to send him help from His sanctuary. He was sure he would get help from the Lord, and therefore he made a positive confession that he knew the Lord saved His anointed; He would hear him from His holy heaven and save him with the strength of His right hand (v.6).

What kind of danger did David face that he cried out to the Lord for help? The Word of God tells us that David had an enemy who was waiting for an opportunity to kill him. Many a time Saul who knew that the kingdom would pass from him to David, sought to kill him. David's life was in constant danger and every time he heard Saul was approaching the place where he was hiding, he cried out to the Lord to hear his prayer and send him help from His sanctuary. He was confident that the Lord would fulfil the desires of his heart.

Psalm 20 is a psalm of David to the chief musician. In verse 4 David tells the chief musician that God will fulfil all his counsel. We the creation of God cannot give advice or directions to the Creator, but if you are anointed, the Lord will fulfil your heart's desires as well as listen to your suggestions. Note how Peter said to Jesus, whom he saw walking on the water, *"Lord if it be thou, bid me come unto thee on the water"* (Matt.14:28). Jesus immediately took Peter's counsel and said, "come" (v.29).

Children of God, if you are anointed, the Lord will save you from danger, hear you from His holy heaven, and fulfil the desires of your heart. If you have not been anointed so far, ask the Lord to anoint you and He will fill you with His Spirit. Has He not said, *"... ask and ye shall receive that your joy may be full"*? (John 16:24).

God is a refuge to His anointed

"The LORD is their strength, and he is the saving strength of his anointed" (Ps.28:8).

In the Tamil version a word equivalent to 'stronghold' is used. In this psalm we read that God is a refuge to the anointed.

David escaped to the cave Adullam and later went to the king of Moab. He told the king of Moab that he wished to leave his family there till he knew how the Lord was going to lead him. After leaving them there, he found a stronghold and stayed there for a short time. Being literally in a stronghold, David must have understood the safety he could enjoy there, and therefore he said in this psalm that the anointed people could find safety in the Lord, who is their strength and a stronghold.

One day God told Elijah to go to brook Cherith and hide himself there. Thus Elijah could find shelter in a solitary place. Anointed people will have shelter or refuge in the Lord.

Martin Luther was given to despondency on a few occasions in his life. One day, as he was feeling very depressed, he was touched by

a scene right before his eyes. A bird sang an evening song after it had finished its supper and flew to a branch of a tree. As he was watching, it stuck its head between its wings and began to sleep. Luther was surprised to see the bird sleeping unmindful of what was happening around it. It did not seem to be bothered about food or shelter. It let God take care of its future. Watching the bird taught him a valuable lesson.

If God Almighty provides shelter or refuge to birds, how much more is He sure to provide refuge or a place of safety to His anointed! On several occasions David must have found refuge in God, and therefore he said he took refuge under the shadow of the Almighty. Needless to say, if you are anointed, you can be sure that the Lord will be a haven of safety and rest for you.

God is a lamp to His anointed

"There will I make the horn of David to bud: I have ordained a lamp for mine anointed" (Ps.132:17).

God has ordained a lamp for His anointed. (In the margin of my Bible I find the word 'candle' for 'lamp'). The anointed people will be guided by the light that goes before them. Some times a believer is not sure which way he should go. That is because he is not anointed as he ought to be. Just because he prays, reads the Bible and meditates on it, he cannot be said to be anointed. An anointed man is one who, besides being filled with the Holy Spirit, is completely resigned to the will of God. Every believer who is anointed will be led by the light which leads him in the right path.

Whenever King David needed God's guidance, he inquired the Lord. For instance, when he was in Ziglag, his wives and children were taken captive by the Amalekites, and David inquired the Lord if he should go after the Amalekites and if he would retrieve all that he had lost. God told him to go and he got back all that he had lost. After the death of Saul, David inquired the Lord if he should go to Judaea in Israel and stay there (II Sam.2:1). When the Lord told him to go, he asked Him where he should stay and the Lord told him to stay in Hebron. In this way David asked the Lord for guidance every time he was in need of it and the Lord was a lamp to him guiding him at every step. In the same way, if you are anointed by God, He will be your lamp and He will guide you in the right way so that you will never get confused.

I read about an incident in the life of a nurse working in a hospital. Because she had committed a grievous sin, she lost her peace of mind. The Holy Spirit convicted her of her sin with the result, she wept bitterly for many days and prayed. Jesus touched her, washed her sin with His blood and saved her. She became cheerful and radiant because of her experience of salvation.

One night as she was returning home, she stopped at a store to buy a few things. One of the clerks who worked with her remarked that she looked so bright that one would think she had a candle lit within her. He added that the expression on her face indicated that she had fallen in love. The nurse replied that there was a candle lit within her and indeed she was in love. The One she was in love with was He who loved her beyond measure and He was Jesus Christ, her Lord and Saviour.

It is a marvellous experience to be anointed by the Lord. The anointed children of God have the light by which He leads them in the path of righteousness.

God gives strength to His anointed to do effective ministry

"The Spirit of the Lord GOD is upon me because the LORD hath anointed me to preach good tidings unto the meek; he hath sent me to bind up the brokenhearted, to proclaim liberty to the captives, and the opening of the prison to them that are bound" (Is.61:1);

This is a prophecy about the Lord Jesus Christ spoken by Isaiah the prophet. This prophecy was fulfilled in the life of Jesus as we hear Him declare in Luke 4:21. Jesus could do an effective ministry because He was anointed by God. God anointed Him with the Holy Ghost and power.

Unless a man is called of God as Aaron was, he cannot do the ministry. In the Old Testament days the chief priest and priests were anointed before they began their ministry. In the present age there may be some who begin their ministry without the anointing and they may receive the anointing sometime later. They will feel how different their ministry is after they are anointed. In my own ministry I could feel the difference strongly after I was anointed by the Holy Spirit.

There was a noticeable difference in Peter's ministry after he was baptized with the Holy Ghost on the day of Pentecost. The anointed ministry of Peter, Stephen, Philip and others was exceptional. The Bible says, those who heard them speak were pricked in their heart. On another occasion it was said that they were touched in their heart. That was the work of the Holy Spirit they had received when they were anointed.

Dear servant of God, you may be preaching the gospel, but, your ministry will be fruitful only if you are anointed. When Peter, who was anointed, preached to those gathered in Cornelius' house, they were all filled with the Holy Ghost and got baptized in water. Philip, Peter and Paul did the ministry of evangelism but they did not stop with preaching salvation. They led people to baptism and the anointing of the Holy Spirit.

Dear child of God, if you have been called to do the ministry, ask yourself if you are preaching the full gospel and leading people to salvation in the true sense of the word. Your ministry will be effective only if you are filled with the Holy Spirit. You will then lead people to salvation and the baptism of the Holy Spirit.

God gives His anointed the fulness of the Holy Spirit

"Thou preparest a table before me in the presence of mine enemies: thou anointest my head with oil; my cup runneth over" (Ps.23:5).

Here we see David speaking of his own experience. He says, "You have anointed my head with oil." The expression, 'filled with the Holy Spirit' is analogous to a cup being filled with a fluid substance. We can compare our body to a cup and say that the cup is filled with the Holy Spirit.

Here David says, *"My cup runneth over."* This speaks of not only the fulness but the overflowing of the substance in the cup. The experience of being filled with the Holy Spirit can be compared to a glass being filled with water. After the glass is filled with water, if more water is poured, it will flow over. The same will be the experience of those who are anointed by God. If they thirst for more and more anointing, their cup will not only be full to the brim, it will flow over.

Dear anointed children of God, do not be satisfied with the anointing you have received. Be full of the Holy Spirit always and, like David, you should be able to say that your cup runs over.

Some saints of God experienced a very heavy anointing which they were not able to bear. Therefore they said, "Please, Lord, no more." It just means that the anointing they received gave them an overflowing experience. When King David said his cup ran over, he meant that the anointing he received over flowed.

Dear children of God, do not be satisfied with a few drops of the anointing, but have the fulness and overflowing of it. If you are filled with the Holy Spirit, you will enjoy all the blessings God has in store for His anointed.

May God bless you with fresh anointing each day of your life. Amen.

ஊழியர் பகுதி

ஜெபவீரன் ஜான் ஹைடு

6. நல்ல மேய்ப்பனின் குரல் கேட்டல்

தொடர்ச்சி

பக்தன் ஜான் ஹைடுவின் ஜெப ஜீவியத்தின் மூலமாக அவருடைய சக ஊழியர்கள் அநேகர் ஆவியில் கிறிஸ்துவின் பாடுகளாகிய அனுபவத்துக்குள் பிரவேசித்தனர். மக்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்துவதே இவ்வாழ்க்கையில் மிக, மிகக் கடினமான பொறுப்புள்ள பணி. அதோடு ஆண்டவர் பார்வையில் மிக, மிக அருமையானதும் அவருக்கு மிகவும் உகந்ததுமான பணியும் பலியும் இதுவே.

இப்பணியில் நாம் இயேசு இரட்சகர் உலக மக்கள்பால் கொண்டுள்ள அளவற்ற அன்பிலும், நேசத்திலும் அவர்களின் மீட்பிலும் நித்திய வாழ்விலும் அவர் கொண்டுள்ள கரிசனையிலும், ஏக்கத்திலும் அங்கலாய்ப்பிலும், அவரின் கண்ணீரிலும் நாம் பங்குகொள்வது அவசியம். இவற்றின் அடிப்படையில் அமையாத பணி ஒன்றுக்கும் உதவாது. அதனால் ஓர் ஆத்துமாகூட இரட்சிப்பின் அனுபவத்தில் பிரவேசிக்க முடியாது.

தம் நாம மகிமைக்காக, மனம், சரீரம், ஆத்துமா மூன்றும் முழுமையாக ஈடுபடுத்தப்படாத பணியை ஆண்டவர் விரும்புவதில்லை. அவருக்காக அது ஒன்றையும் சாதிக்கமுடியாது. பழைய ஏற்பாட்டில் எரேமியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை இங்கே நாம் நினைவுகூருவோம்.

"ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்" (எரே.9:1).

இரட்சகர் இயேசு கிறிஸ்து அன்று கொடிய சிலுவை மீது அனுபவித்த பாடுகளோடு அவருடைய மீட்புப்பணி நின்றுவிடவில்லை என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம். ஜான் ஹைடுவும் அவருடன் பணியாற்றிய ஊழியரும், கிறிஸ்து இயேசு அனைத்துலக மக்களின் இரட்சிப்புக்காக இன்றும் அனுபவித்து வரும் ஏக்கத்தையும் அங்கலாய்ப்பை யும் தம் உள்ளங்களில் உணர்ந்ததுடன் தாங்க[illegible] அந்த அனுபவத்தினுள் பிரவேசித்தனர் என[illegible] மிகப் பொருத்தமாகும்.

இவ்விதமாகப் பிறரின் ஆத்தும ஆதாயத்[illegible] காகவும், அவர்களின் மீட்புக்காகவும் கிறிஸ்து[illegible] அடியார்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொ[illegible] சரீர ஆன்மீகப்பாடுகளின் ஐக்கியத்தில் நாம் எப்ப[illegible] பங்கு பெறுவது? இக்கேள்விக்கு வேத வசனத்தி[illegible] ருந்தே பதில் காண்போம்.

"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்ப[illegible] தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் தட்[illegible] கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படு[illegible] ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு[illegible] பதில் நமக்கு உண்மையும் தீவிரமுமான உலகில்[illegible] விரும்பப்படத்தக்க மற்ற எல்லா ஆசாபாசங்க[illegible] விட அதிகமான ஆர்வமும் ஆவலும் ஏக்க[illegible] உண்டா? என்பதே கேள்வி. இரட்சிப்பின் பணி[illegible] நாம் நம்மை முழுமனதோடும், முழுப்பலத்தோ[illegible] முழு ஆத்துமாவோடும் ஈடுபடுத்தும்போது [illegible] நிச்சயமாகவே பலன் பெறுகிறோம். நாம் அவ[illegible] கென்று கனி கொடுக்கிறோம்.

அப்பொழுது நாம் பிதாவின் அந்தரங்கத்[illegible] பிரவேசிக்கிறோம். அவர் தம் இருதயத்தை நமக்[illegible] திறந்துகாட்டுவதுடன், தம் திருச்சபையின் மீட்[illegible] பணியில் தமது திட்டங்களையும் தமது எதிர்பார்[illegible] களையும் நமக்கு வெளிப்படுத்துவதுடன், ந[illegible] செய்ய வேண்டியதையும், நாம் கடைப்பிடி[illegible] வேண்டிய அணுகு முறைகளையும் நமக்கு அ[illegible] அறிவிக்கிறார்.

இதற்கு நம் வாழ்க்கையில் நாம் பிறரு[illegible] நடந்துகொள்ளும் முறையையே ஒரு சிறந்த எடு[illegible] துக்காட்டாகக் கூறலாம். அதாவது நமது சந்தோஷ[illegible] தையும் நம்மை மகிழ்விக்கும் காரியங்களையும் ந[illegible] பலரிடம் சாதாரணமாகச் சொல்லிக் கொள்கிறோ[illegible] ஆனால் நம்முடைய கவலைகளையும், துன்ப[illegible] ளையும், மனப்பாரங்களையும் நம்முடன் மிக[illegible] நெருங்கிய, நம் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உ[illegible] வர்களான வெகு சிலரிடமே சொல்லிப் பகிர்[illegible] கொள்ளுகிறோம்.

ஆண்டவரின் அன்பும் இத்தகைய முறை[illegible] லேயே கிரியை செய்கிறது. தம் மார்பின்மீது சாய்[illegible] ருந்த, தம் அன்பிற்குகந்த சீஷனாகிய யோவானு[illegible] இயேசு கிறிஸ்து தம் இருதயத்தைத் திறந்து, தம[illegible] அருமையான சீடர்களில் ஒருவனே தம[illegible]

...க் கொடுக்கப்போகிறான் என்பதையும், தம் ...த்தை உடைக்கும் மனவியாகுலத்தையும், ...ணையும் அறிவித்தார்.

எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஆண்டவருடன் ...ல் அவருடன் ஐக்கியப்பட்டு ஜீவிக்கி... அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக நாம் ...ன் சிந்தனைகளிலும் அவரின் கவலைகளிலும் ...பெறுகிறோம். நம்முடைய நொறுக்கப்பட்ட ...மே நமக்கு வேண்டும். நம்முடைய துன்பங் ...அல்ல; அவருடைய துன்பங்களுக்கு நாம் பங் ...ளாய் இருக்கிறோம்.

நம்முடைய கண்ணீர்களால் அல்ல; இரட்சகர் ...கிறிஸ்துவின் கண்ணீரையும் அன்பையும், ...ான அழைப்பையும் மக்களுக்கு இரவும், ...ம் எடுத்துச் சொல்லியே அவர்களை நாம் ...டைய மந்தைக்குள் கொண்டுவரவேண்டும். ...டைய பாடுகளின் ஐக்கியம் அவர் நமக்கு ...மாகத்தரும் ஓர் ஈவு; நாம் முழு விசுவாசத்து... அவருடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண் ...ஒரு வரம். நம் உணர்வுகளின் குறைகளைப் ...நாம் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை.

...சாப் மாநிலத்தின் 1909 ஆம் ஆண்டு வரு... சபை மாநாடு கூடியபோது ஆண்டவருக்கு ...யான திருப்பணியாளர் ஒருவரால் ஏறெடுக் ...ஒரு ஜெபத்தை இங்கே நாம் கவனிப்போம்; ...கிருபையும் நிறைந்த என் பரம தந்தையே, ...களை நேசிக்கும் உம் நேச இருதயத்தை ...த்தாரும். அவர்களுடைய பாவங்களுக்காக ...றுக்கப்பட்ட உம்முடைய இருதயத்தை எனக் ...ரும்.

உம்முடைய கண்ணீரை எனக்குத் தந்து, ...றின்மூலம் நான் பாவிகளுக்கு இரவும் பகலும் ...ரை தந்து, அவர்களை உமது இரட்சிப்புக்குள் ...நடத்த எனக்கு உதவி புரியும். என் ஆண்டவரே, ...அனலற்ற நிலையில் இருக்கிறேனே, என் ...கண்ணோக்கிப் பாரும். ஐயோ என் இருதயம் ...பட்டு, மரித்துப்போய் இருக்கிறதே.

நான் உம்முடைய திருப்பணியில் உற்சாகமில் ...ல் காணப்படுகிறேனே. என்னை ஆட்கொண்டு ...யெடுத்து, மக்களை உமக்காக ஆதாயப்படுத் ...மீட்புப் பணியில் என்னைப் பலப்படுத்தி, தகுதி ...ச் செய்து என்னை வல்லமையாக உபயோகப் ...த்தியருளும்'' என்று அவர் ஜெபித்துக்கொண்டி ...தார்.

அப்போது அங்கிருந்த நண்பர் ஒருவர் அவ் ஊழியரை இடைமறித்து "அன்பரே! ஏன், நீர் நிர்க்கதியான நிலையில் உள்ள உம்மையே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்? உம் இருதயம் குளிரடைந்து, மரித்த நிலையில் இருப்பது உண்மையே. ஆனால் நீர் ஆண்டவரிடம், அன்பு நிறைந்த அவருடைய இருதயத்தை உமக்குத் தந்தருளுமாறு ஜெபித்தீரே, பாவிகளுக்காக அவர் கொண்டுள்ள மனபாரத்தையும், கிறிஸ்துவின் கண்ணீரையுங்கூட உமக்கு அருளும்படி உம் ஜெப மன்றாட்டில் கேட்டீரே.

அவர் உண்மையான ஆண்டவராயிற்றே, அவரிடம் பொய் என்பது சற்றும் கிடையாதே. நீர் கேட்டதெல்லாவற்றையும் அவர் உடனே உமக்குக் கொடுத்துவிட்டார் என்பதை நீர் அறியவில்லையா? அப்படியிருக்கும்போது அவருடைய இருதயத்தைக் கண்ணோக்காமல், உம் பார்வையை ஏன், நீர் உம்முடைய இருதயத்தின்மேல் திருப்புகிறீர்?" என்று கேட்டார்.

ஆத்துமாக்கள் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர்கள் அவருடைய மந்தையில் சேர்க்கப்படுவது முற்றிலும் பரிசுத்த ஆவியானவர் மூலம் நடப்பிக்கும் அதிசயமான கிரியையாகும். அவரன்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பரம இரகசியத்தை ஜான் ஹைடு நன்கு அறிந்திருந்தார். அவர் தம் சக திருப்பணியாளர்களிடம் அடிக்கடி சொல்வது இதுவே.

"நாம் எப்போதும் இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கியிருக்கும்போது அவரே ஆத்துமாக்களை நம் மூலமாகத் தம்மண்டை இழுக்கிறார். இது நடைபெறுவதற்கு நாம் கடைப்பிடிக்கவேண்டிய மிக அவசியமான ஒரு நிபந்தனை என்னவென்றால், நம் வாழ்க்கையில் அவரே முதலிடம் பெற்று, நம் அன்றாட ஜீவியத்தில் அவரே உயர்த்திக் காண்பிக்கப்படவேண்டும்.

நாம் அவருடன் சிலுவையில் அறையப்படவேண்டும். 'நான்' என்ற மனப்போக்கும் அகங்காரமுமே ஏதாவது ஒரு வடிவத்தில் நமக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையில் வந்து, நாம் அவருடன் ஐக்கியப்பட்டு வல்லமைபெறாதபடி செய்துவிடுகிறது. 'நான்' என்ற சிந்தை சிலுவையில் அறையப்பட்டு மரித்து, கிறிஸ்துவுடன் அடக்கம் செய்யப்படவேண்டும்.

அவ்வாறு இந்த, 'நான்' என்ற அகங்காரநிலை மரித்து அடக்கம்பண்ணப்படாவிட்டால், நம்மி

லுள்ள சுபாவமனிதனின் (Natural man) குணப்படாத நிலையாகிய துர்க்கந்தம் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை வராதபடி அவர்களைத் துரத்தியடிக்கிறது. நம்மிலுள்ள பாவத்தன்மையாகிய பழைய மனிதனின் சுபாவம் முழுமையாக சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்படும் போது நமது பழைய நிலை மறைவதற்குத் தேவையான மூன்று அடிகளை நாம் எடுத்து வைத்தவர்களாகிறோம்.

அதே நேரத்தில் எழுப்புதல்பெற்று, எழுப்பப் பெற்று, கிறிஸ்துவுடன் அமர்த்தப்பட்டு (revived, raised, and seated) நாம் அவரில் பெறும் புதிய பிறப்பான உன்னத நிலையை நோக்கிச் செல்வதான மூன்று அடிகளை நாம் எடுத்துவைப்பதும் நடைபெறுகிறது. நம் வாழ்க்கையில் இந்தப் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட இரட்சகர் இயேசு கிறிஸ்து தாமே அனுமதிக்கிறார். அவரே நம்மில் உயர்த்திக் காண்பிக்கப்படுகிறார்.

அவர் நம் மூலமாக மக்களைத் தம்மண்டை இழுக்கிறார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகின்றன. இரட்சகருடன் நெருங்கிய தொடர்புகொண்டு ஜீவித்து, அவருடைய பாடுகளில் ஐக்கியம் பெறுதல் மூலமே, இந்த மேலான நிலையை நாம் பெற்று, அவர் நம்மில் மகிமைப்படுகிறார்.

பக்தன் ஹைடு தன் மனதில் இடைவிடாது சிந்தித்த சத்தியம் என்னவென்றால், இன்றும் நம் இரட்சகர் ஆத்துமாக்களுக்காகப் பசி தாகமுள்ளவராக இருக்கிறார்; தம்மை அறியாமலும், தம்மை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிற மக்களுக்காக மனவியாகுலப்படுகிறார் என்பதே. "சிதறுண்ட ஆடுகளாகிய என் மக்கள் அனைவரும் என் மந்தையில் கூட்டிச் சேர்க்கப்படும்வரை என் ஆவியில் நான் துயரப்படுவேன்" என்று இயேசு கிறிஸ்து செய்த பிரதிக்கினையை ஜான் ஹைடு தனக்கு முன்மாதிரியாக ஏற்றுக்கொண்டார்.

அவர் படிப்படியாக இவ்வுலகத்தின் பிணைப்புகளிலிருந்து விலகி, ஆத்துமாக்களுக்காகப் பரிதவிப்பதையும், மக்களைக் கிறிஸ்து இயேசுவுக்காக ஆதாயப்படுத்துவதையும் தம் முழுநேரப் பணியாகக் கொண்டார். விழித்திருந்து ஜெபிப்பதைப் பெரிதும் விரும்பி அதையே தெரிந்துகொண்டார்.

உயிர் வாழ்வதற்குமட்டும் போதுமான அளவுக்குத் தன் உணவை வெகுவாகக் குறைத்துக் கொண்டதுடன், தன் முழு நேரமும் இறைவனுக்கே உரியது

என்று உறுதியாக நம்பிய அவர், தன் சரீர அசதிக்
போதுமான அளவு ஓய்வு எடுப்பதையும் தவிர்த்
ஒவ்வொரு நாளும் மிகச் சிறிது நேரமே தூங்கி
அவ்வாறு இருப்பினும் பிறர் கண்டுகொள்ளு
வண்ணம் அவருடைய தோற்றத்தில் அசதி
அவருடைய முகத்தில் சோர்வோ காணப்
வில்லை. அவர் அசாதாரணமான உற்சாகத்துடனு
புத்துணர்ச்சியுடனும் காணப்பட்டார்.

அவருடைய முகத்தில் ஒரு தெய்வீக மலர்
இருந்தது. எப்போதுமே சிறுகுழந்தைகளுட
விளையாடி உறவாடுவதில் மகிழ்ச்சியும், இன்பமு
காண்பவர் அவர். இளம் உள்ளங்களில் அவர்
தனி இடம் பெற்றிருந்தார். சிறுபிள்ளைகள் அவ
அன்புடன் 'ஜான் மாமா' என்று அழைத்து அவருட
சிரிப்புடனும், உல்லாசத்துடனும் பழகுவது வழக்

ஆனால் இப்போதோ குழந்தைகளுடன் உ
வாடும் பொழுதுபோக்கையும் அவர் ஒதுக்க ஆ
பித்தார். அக்குழந்தைகளும், அவர் தங்களுட
நடந்துகொள்ளும் விதத்தில் ஒரு புது மாறுதலை
கண்டுகொண்டதுபோல் தோன்றியது. அவருடை
முன்னிலையில் அவர்கள் அடக்கத்துடனும் அ
தியுடனும் இருந்தார்கள்.

அவருடைய முகத்தில் காணப்பட்ட ஒ
அவர் மற்றோர் உலகுடன், அதாவது தேவ சமுகத்
டன் தொடர்புகொண்டுள்ளார் என்பதை அவர்கள
கண்டுகொண்டதுபோல் தோன்றியது. ஆனா
அவர் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துவிட்டா
என்றோ, சமுதாயத்தைப் புறக்கணித்தார் என்றோ
நினைப்பது முற்றிலும் தவறு. உண்மையில் அ
மக்களுடன் இன்னும் அதிகமாகத் தொடர்புகொ
டார்.

அவருடைய அருள் நிறைந்த வாழ்க்கை அ
ரைக் கவர்ந்து அவர்பால் இழுத்தது. பலர் அவரி
நெருங்கிவந்து, தங்களுடைய கவலைகள், வா
கைப் பிரச்சினைகள், ஆன்மீகக் குறைபாடுகள்
றிய தங்கள் மனபாரத்தை வெளியிட்டு, தங்களு
காக ஜெபிக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்ட
பக்தன் ஹைடு அன்புடனும், பச்சாதாபத்துடனு
அவர்களைச் சந்தித்தார். இப்புனித பணிக்கு
தமக்குப் போதிய நேரம்—அவகாசமில்லை—என்
அவர் குறைபட்டதே கிடையாது.

அவருக்கு எப்போதும் போதுமான நே
இருந்தது. காரணம் மனநலிவுற்றோர், ஆன்மீக தா
கொண்டுள்ளோர்மீது அவருக்கிருந்த அன்பு

...லீக இரக்கமுமே. அவர்களுடன் ஆவிக்குரிய ...ங்களைப்பற்றிப் பேசி அவர்களுடைய துன்பங் ...மாற்றங்கள் ஆகியவற்றைத் தனதாகவே கருதி ...வற்றைத் திருவசனங்கள் மூலமாகவும் ஆண்ட ...ன் கிருபையினாலும் இலகுவாக்கி அவர்களுக்கு ...சாந்தியையும் சமாதானத்தின் வழியையும் ...டினார்.

உண்மையாகவே நல்மேய்ப்பராகிய இயேசு ...ஸ்து இவ்வுலகிலுள்ள தம் மக்களின் இகபர ...ங்களிலும் பிரச்சினைகளிலும் அக்கறையும் ...னையும் உள்ளவராய் இருக்கிறார் அல்லவா? ...ஸ்துவின் அன்பில் ஆர்வத்துடன் பங்கேற்ற ...ஹைடு, விழிப்பு, உபவாசம், ஜெபத்தின்மூலம் ...வருடன் தரித்திருந்து முழுநேரமும் மக்களின் ...க்காகவும் மெய்ச்சமாதானத்துக்காகவும் ஜீவித் ...

...தன்னுடைய உணவு, ஓய்வு, உறக்கத்தைப் ... அவர் சற்றும் பொருட்படுத்தவில்லை. இவ் ... இடைவிடாத சிரமத்தையும், ஓய்வின்மையை ...தன் உடல் நலத்தைப்பற்றிய அவரது இலட்சி ...யையும் க்வனித்த அவரது சக ஊழியரும் அவரு ... நெருங்கிப் பழகிய திருச்சபை மக்களும் ...ரைப்பற்றிக் கவலையுற்று, செய்வதொன்றும் ...யாது திகைத்தனர்.

ஆனால் பரம எஜமான் இயேசு கிறிஸ்து தம் ...ன் ஹைடுவை அற்புதமாகத் தாங்கித் தம் திருப் ...யில் அவருக்கு விசேஷ பலன் அளித்து வந்தார். ...ளின் இரட்சிப்புக்காகவும், ஆன்மீக, ஆரோக்கி ...துக்காகவும் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த மனப் ...ம் கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளின் அடிப் ...யில் அமைந்தது என்று கூறுவதே பொருந்தும். ...சமயம் மௌனமாகவும், மற்ற நேரங்களில் ஏக் ...லும், பெருமூச்சுகளோடும் மந்தையைவிட்டு ...கி, திக்குத் திசை அறியாது பூலோக மாயையில் ... உழலும் இலட்சாதிலட்சம் மக்களுக்காக ஆண் ...வின் சமுகத்தில் அவர் ஜெபத்தில் போராடினார்.

அவருடைய ஜெபத்தில் நம்பிக்கையின் பெல ..., விசுவாசத்தின் உறுதியும் காணப்பட்டது. ...ஸ்துவின் அன்பையும், அன்பு நிறைந்த கிறிஸ்து ...யுமே அவர் உறுதியாகப் பற்றிக்கொண்டார். தன் ...ஜெபங்களை அவர் கேட்கிறார்; தான் கேட்கிற ...களை அருளிச்செய்வார் என்ற தளராத நிச்சயம் ...ருக்கிருந்தது.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

பாடம் 6

(தொடர்ச்சி)

உன்.2:3-4

உன்னதப்பாட்டு 2 ஆம் அதிகாரத்தின் 3 முதல் 4 வசனம்வரை வாசிக்கவும்.

மூன்றாம் வசனம்

"காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படி யிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்; ..." (உன்.2:3).

காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் ஒப்பற்றது. இவ்வசனத்தில் கூறப்பட்டிருக்கும், *'குமாரர்கள்'* என்னும் சொல் உலகில் பாவத்தில் வாழும் மக்களைக் குறிப்பிடுகின்றது. அவர்கள் நற்கனிகளைத் தரும் மரங்களுக்கு ஒப்பானவர் அல்லர். அவர்கள் காட்டு மரங்களுக்கு ஒப்பாவர். ஆனால் தன் நேசரோ, இவ்வுலகின் பாவங்களுக்கு விலகி வாழும் ஒப்பற்றத் தனித்தன்மையை உடையவர் என்பதை ஓர் அழகான உவமையால் மணவாட்டி விளக்கியுள்ளாள். எனவே, தன் நேசரை அவள் காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரத்திற்கு ஒப்பிட்டாள்.

கிச்சிலி மரம் (Apple Tree) அழகானது. அதன் இலைகள் பச்சை நிறத்தோடுகூடிய பசுமையானவை. அதன் கனிகள் இனிமையான சாறைக் கொடுக்கக்கூடியவை. பசுமையான அதன் நிழல் ஒப்பற்றது. ஆம், மணவாளனாம் இயேசுவும் கிச்சிலி மரத்தைப்போல, தமது தனித் தனித்தன்மைகளில் ஒப்பற்றவர்.

முதலாவதாக, கிச்சிலி மரத்தைப்போல இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஒப்பற்றதும் அதிசயமானதும் ஆகும். ஆதாமின் பாவ வாசனையின் ஓர் அணுகூட காணப்படாத மனுஷகுமாரனாக அவர் இவ்வுலகில் பிறந்தார். இரண்டாவதாக, பசுமையான இயேசுவின் நிழல், மனுக்குலத்திற்கோர் ஒப்பற்ற அடைக்கலமாகும். பாவத்திலும், ரோகத்திலும், துக்கத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு அவர் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும், விடுதலையையும் அளிக்கிறவர். மூன்றாவதாக, அவரது கனி—அவரது வாய்ச்

சொல்—சபைக்குப் புசிப்புக்கேற்ற, ஒப்பற்ற, **இனிய ஆகாரமாக விளங்குகின்றது.** ஆம், மணவாளனாம் இயேசு கூறியுள்ள வசனங்கள் மணவாட்டியாகிய சபைக்குச் சிறந்த போஜனமன்றோ?

மணவாட்டி மணவாளனை, *'என் நேசர்'* என்று அழைத்ததன் காரணம் என்ன? அவருக்கு இணையாக இவ்வுலகில் ஒருவரும், ஒரு பொருளும் இல்லை என்பதே. ஆதிக்கிறிஸ்தவ சபையில் பிரிவினைகள் காணப்பட்டன. *"உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன்"* (1 கொரி.1:12). கொரிந்து சபையார் கிறிஸ்துவைத் தங்கள் நேசராகக் **கணித்திருப்பார்களாயின், இவ்விதக் குழுக்களாகத் தங்களைப் பிரித்து எண்ணியிருந்திருக்கமாட்டார்கள்.**

மணவாட்டி, *"அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன்"* (உன்.2:3) என்றாள். வேதாகம மொழிபெயர்ப்பின் மூலபாஷையில், *"வாஞ்சையாய் உட்காருகிறேன்"* என்ற சொற்கள், *"அவரது ஆவியின் வல்லமையால் அதிகமாக ஈர்த்துக்கொள்ளப்படுகிறேன்"* என்ற பொருளில் கூறப்பட்டுள்ளன. இன்று, எத்தனைபேர் மணவாளனாம் இயேசுவின் அன்பின் உச்சிதத்தால் தூண்டப்பட்டு எழுப்பப்பட்டுள்ளீர்கள்? ஆராயவும்.

லேகியோன் பிசாசுகள் பிடித்தவன் இயேசு கிறிஸ்துவினால் விடுதலையாக்கப்பட்டபின், தெளிந்த புத்தியடைந்து, அவரது பாதத்தில் உட்கார்ந்திருந்தான் என்று வேதம் கூறுகிறது. மார்த்தாளின் சகோதரியாகிய மரியாளுங்கூட இயேசுவின் பாதத்தில் மெய்மறந்து உட்கார்ந்திருந்தாள். அவர்கள் பெருமகிழ்ச்சியும் பேரின்பமும் பெற்று அநுபவித்திருப்பர். ஆம், நேசரின் பாதம் அத்துணை இன்பமானது!

"அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது" (உன்.2:3). ஆம், கிச்சிலி மரத்தின் கனி, சத்துவத்தை—பெலனை—கொடுக்கக்கூடியது. மணவாளனாம் இயேசுவினால் கிடைக்கும் நீதியின் கனிகளால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையிலே பெலப்படுத்தப்படுகிறோம் என்பதற்கு இது ஒப்பனை.

"தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்" (பிலி.1:10,11).

அவரது நீதியின் கனிகளால் நிறைந்திருக்கும்போது, விசுவாசிகள் அவரது வருகையின் நாளுக்கென்று துப்புரவாக்கப்பட்டவர்களாயும் இடறலற்றவர்களுமாயும் வாழ முடியும். மணவாளனாம் இயேசு தமது மதுரமான கனிகளால் சபையை ஆண்டு பெலப்படுத்தி நடத்துகிறவர்.

உன்னதப்பாட்டு முதலாம், இரண்டாம் அதிகாரங்களை ஆழ்ந்து வாசித்தறியவும். இவைகளில் மணவாட்டி மணவாளனாம் இயேசுவுக்கு அருகாமையில் சென்று பல சொற்றொடர்களைக் கூறியுள்ளாள். அவைகள் குறிப்பிடத்தக்கவகையில் சிறந்து காணப்படுகின்றன. அவை: *"உமக்குப்பின்னே ஓடிவருவோம்"* (ஓடிச்செல்லுதல்) (உன்.1:4); *"கால்சுவடுகளைத் தொடர்ந்துபோய்"* (தொடர்ந்து செல்லுதல்) (உன்.1:8); *"ராஜா பந்தியிருக்குந்தனையும்"* (அவரோடு பந்தியிருத்தல்) (உன்.1:12); *"நம்முடைய மஞ்சம் பசுமையானது"* (அவரது இளைப்பாறுதலைப் பெற்று அநுபவித்தல்) (உன்.1:16); *"அதின் நிழலில் உட்காருகிறேன்"* (அவரது பாதத்தில் அமருதல்) (உன்.2:3) என்பன. இச்சொற்றொடர்கள் அனைத்தும் மணவாட்டி மணவாளன்மீது கொண்டிருந்த அன்பின் உச்சிதத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

அருமையானவர்களே! விசுவாசிகளுடைய வாழ்க்கையில் மணவாளனாம் இயேசுவின் அன்பின் ஆதிக்கமும், அவரது செல்வாக்கும் சூலமித்தியின் அநுபவம்போன்று காணப்படவேண்டும். அவளது அநுபவங்கள் மிகச் சிறந்தவை அன்றோ?

சபை—விசுவாசிகள்—இயேசுவின் பின்னே ஓடவேண்டும்; அவரைத் தொடர்ந்து செல்லவேண்டும்; அவரோடு பந்தியிருந்து அவரது ஆவிக்குரிய போஜனத்தால் திருப்தியாகவேண்டும்; அவரோடு கூட இளைப்பாறவேண்டும்; அவரது நாமத்தின் நிழலில் வாஞ்சையாய் அமர்ந்திருத்தல்வேண்டும். **அதாவது, மணவாளனது ஒப்பற்ற தனித்தன்மையால் சபை விசுவாசிகள் கவரப்பட்டு, அவரது நேசத்தில் மூழ்கியிருத்தல்வேண்டும்.**

நான்காம் வசனம்

"என்னை விருந்துசாலைக்கு அழைத்துக் கொண்டுபோனார்" (உன்.2:4).

இச்சொற்றொடர் மூலபாஷையில், *"என்னைத் திராட்சரச வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார்"* என்று கூறப்பட்டுள்ளது. மணவாட்டி மணவாளனோடு இணைந்து மகிழுகிற அநுபவத்தை இது சுட்டிக்காட்டுகின்றது. *"ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டுவந்தார்"* என்று உன்னதப்பாட்டு முதலாம் அதிகாரம் 4 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். தமது அறைக்குள் அழைத்துச் சென்ற மணவாளன், இப்போது விருந்துசாலைக்குள்ளும் அழைத்துச் சென்றதாக மணவாட்டி கூறியுள்ளாள். அவள் முன்பு பெற்றுக்கொண்ட திருப்தியைக்காட்டிலும் மேலானதோர் அநுபவத்திற்குள் சென்றாள்.

விருந்துசாலை, ஆராதனை செய்யும் இடத்திற்கு ஒப்பாகும். மணவாளனாம் இயேசுவை ஆராதிப்பதில் ஏற்படும் மகிழ்ச்சி—இன்பம்—ஒரு [illegible] அநுபவம் ஆகும். திராட்சரசம் தேவர்களையும், மனிதர்களையும் மகிழப்பண்ணும் என்று வேதம் கூறுகிறது (நியா.9:13).

சபை ஆராதனைகளில் கிடைக்கும் மகிழ்ச்சி திராட்சரசத்திற்கு ஒப்பானது. பரிசுத்த ஆவியின் நிறைவை முழுவதுமாக அநுபவிக்கும் இடந்தான் சபை ஆராதனைகளில்தான் கிறிஸ்துவோடு நெருங்கி, அவரது இன்பரசத்தைப் பருகமுடியும். இது என்றென்றும் ஒரே விதமாக இராது. விசுவாசிகள் எவ்வளவாக இயேசுவைக்கிட்டி நெருங்கி வாழுகிறார்களோ, அவ்வளவாக அவரது அன்பை ருசிக்க முடியும்.

"இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள்" (அப்.2:13).

"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபே.5:18);

திராட்சரசத்தினால் மகிழுகிறதைப்போன்ற அநுபவம் பெந்தெகொஸ்தே நாளின் அநுபவமாகும். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றது, மது அருந்தியவர்களின் செயல்களுக்கு ஒப்பாகக் காணப்பட்டது. ஆவியின் நிறைவைப்பெற்ற சீஷர்களைக் கண்ட மக்கள், *"இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள்"* என்றனர். பவுல் அப்போஸ்தலனும், *"ஆவியினால் நிறைந்து இருங்கள்"* என்று கட்டளையிட்டது, இதனை உறுதிப்படுத்துகிறது.

ஆராதனைக்குப்போவது, பரிசுத்த ஆவியைப் பெற்று அநுபவிக்கும் கூட்டங்களுக்குப்போவது, ஒடுக்கக்கூட்டங்களுக்குப்போவது இவைகள் யாவும் நேசரோடே விருந்து சாலைக்குள் பிரவேசிக்கும் அநுபவத்திற்கு ஒப்பானவையாகும். முதன்முறையாக அந்நியபாஷை அடையாளத்தோடு ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற விசுவாசிகள், "இதுபோதும்" என்று திருப்தியடையக்கூடாது. மீண்டும், மீண்டும் ஆவியில் நிரம்பி வாழவேண்டும். அப்போதுதான் விருந்துசாலையின் பல்வேறு இன்பமான அநுபவங்களைப் பெற்றுவாழமுடியும். மணவாளனாம் இயேசுவின் அன்பில் இவ்விதமாக மூழ்கி வாழ்வதை, சபை—மணவாட்டி—வாஞ்சிக்கவேண்டும்.

"என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே" (உன்.2:4).

கொடி ஜெயத்தைக்குறிக்கும் ஓர் அடையாளமாகும். இது, விசுவாசிகளின் ஜெயஜீவியத்தைப் பொருள்படுத்துகிறது. இதனைக் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால்தான் பெறமுடியும். இயேசுவை அதிகமாக நேசிப்பவர்கள், பாவங்கள் தங்களை மேற்கொள்ளாவண்ணம் பாதுகாத்துக்கொள்வர்.

"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோமர் 5:5).

"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37).

பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய அன்பு விசுவாசிகளின் இருதயத்தில் ஊற்றப்பட்டுள்ளது. அவ்வன்புக்குள் சபையார் மூழ்கியிருந்தால் தேவனுக்கு விரோதமாகச் செயல்படும் பாவங்கள், இச்சைகள் போராட்டங்கள் ஆகிய எல்லாவற்றின்மேலும் ஜெயம்பெறுவர்.

இரு காரியங்களினால் விசுவாசிகள் பாவங்களை மேற்கொள்ளமுடியும். அவை, தேவன் சிட்சிப்பாரே என்றுள்ள பயம்; மற்றொன்று தேவ அன்பில் மூழ்கி, பாவஞ்செய்ய முடியாத ஒரு நிலை ஆகும். அன்பானவர்களே! நீங்கள் எதைத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்? தேவ அன்பினாலும் ஆவியின் அபிஷேகத்தினாலும் நிறைந்துவாழும் விருந்து சாலையின் அநுபவமா? அன்றி, தேவன் சிட்சிப்பாரே என்றுள்ள பயமா? ஆராயவும்.

மணவாளனாம் இயேசுவின் நேசத்தினால் நிறைந்து ஜெயஜீவியம் செய்யுங்கள். நேசமென்

னும் அவரது கொடி உங்கள்மீது பறக்கட்டும். *"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?"* என்று கூறும் பவுலடியாரைப்போன்று முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகக் காணப்படுங்கள்.

சபையாகிய மணவாட்டி, சாதாரண ரோஜாவும், பள்ளத்தாக்கின் லீலிபுஷ்பமும்தான். எனினும், மணவாளனாம் இயேசுவின் கண்கள் சபையின்மீது தான்—விசுவாசிகளின்மீதுதான்—பதிக்கப்பட்டிருக்கின்றன. இதனை விசுவாசிகள் உணர்ந்து, ஆவிக்குரிய வாழ்வில் வெற்றிக்கொடி பிடித்து வாழுவீர்களாக. கர்த்தர் தாமே அதற்கேற்ற கிருபைகளை உங்களுக்குத் தந்தருளுவாராக.

(தொடரும்)

பெண்கள் பகுதி

3. பார்ட்டல்ஜோரிஸ்ட்ராட்டிலுள்ள எங்கள் வீட்டிலே

இரகசிய உதவியாற்றும் வாழ்க்கை

தேன் போன்ற இன்னிசை, எங்கள் இல்லம் எங்கும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. எங்கள் வீட்டில் இருந்த அத்தனை பேரும் கூட்டமாய்க்கூடி அந்த மதுரமான இன்னிசையை அள்ளி, அள்ளிப் பருகிக் கொண்டிருந்தோம். இசை இசைத்தவர் ஒரு யூதர் தான்! எங்களோடுகூடச் சேர்ந்து இசையைச் சுவைத்துக் கொண்டிருந்தவர்களும் யூதர்கள்தாம்! நாசி கொள்கையினரின் வாளுக்குத் தப்பவே அவர்கள் எங்கள் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள்.

யூசி என்ற யூத வாலிபன் அடுத்துப் பாடுவதற்குத் துடித்து நின்றான். கின்னரம் அப்பொழுதுதான் தனது தேன் மதுர இன்னோசை அலைகளை அள்ளி எறிந்துவிட்டு அமர்ந்திருந்தது. அந்த அமைதியைத் தனது அழகிய கானத்தால் கலைக்கவேண்டும் என்று காத்துக்கொண்டிருந்தான் யூசி.

ஆனால் அவனோடு போட்டியிட்டுக்கொண்டு அவனை முந்திவிட்டது நாசி வெடிகுண்டு! அந்த வெடிகுண்டு ஓசையால் திடுக்குற்றிருந்த மக்கள் தெருவிலே பாடிவரும் ஜெர்மானிய வீரர்களின் பாட்டோசையைக் கேட்டுப் பதறி நின்றனர். யூசி என்ற அசல் யூத வாலிபனோ தானும் பாடித்தான் ஆகவேண்டும் என்றாற்போல் பாட ஆரம்பித்தான்.

உடனே காரி டென் பூம் ஆகிய நான் அவ... பாட்டை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொ... டேன். அவனது தொனியோ அசல் யூதத் தொ... அவனது பாட்டொலி வீட்டைவிட்டு வீதி... கேட்டால், அவ்வழியே செல்லும் ஜெர்மானி... போர்வீரர் உடனே ஓடிவந்து அவனையும் பிறரை... கபக்கென்று கைப்பற்றிக்கொள்வர். ஆகவே அ... நாசி போர் வீரர் வீதியைக் கடந்து செல்லும்வ... நாங்கள் அமைதியாய் இருக்க நேர்ந்தது.

மீண்டும் அமைதி நிலவியது. அந்த அ... அமைதியைக் கலைத்து இன்பம் அளிப்பதற்கு நா... கின்னரம் இசைக்க ஆரம்பித்தேன். எங்... இல்லத்தில் உள்ள எல்லாரும் அந்த இசை விருந்தி... கலந்துகொண்டனர். இவ்வாறு நாங்க... இசைக்கடலில் ஆழ்ந்திருக்குங்கால், திடீரெ... எனக்கொரு அவசர அழைப்பு வந்தது.

துரத்தி அடித்துவரும் வேட்டைக்காரர்களுக்... தப்பி ஓடிவரும் முயல்கள்போல இரு யூதர்கள், க... வனும் மனைவியுமாக, ஜெர்மானிய போர் வீரர்க... குத் தப்பி ஓடிவந்து எங்கள் வீட்டில் அடைக்க... புகுந்தார்கள். நான் அவர்களை ஆறுதல்படுத்... அவர்களுக்குச் சுடச்சுடக் கொஞ்சம் காபி குடிக்க... கொடுத்தேன். குவளையைப் பிடிக்கமுடியாத... அவர்களுடைய கைகள் பயத்தால் நடுங்கிக் கொ... டிருந்தன. மேனியெல்லாம் ஆடி அசைந்துகொ... டிருந்தது. வாயைத் திறந்து தங்கள் சோகக் க... யைக் கூறுவதற்கும் முடியாதபடி தத்தளித்து... கொண்டிருந்தார்கள். நான் என்னால் இயன்றமட்டு... அவர்களை ஆற்றித் தேற்ற முயன்றுகொண்டிரு... தேன். பின்னர் அவர்கள் ஒருவாறு தெளிந்து, தங்க... துயரத்தை அள்ளிக்கொட்டினார்கள். பெரும் நிதி... அவர்கள் திடீரென்று விட்டுவிட்டு, உயிர் த... இங்கு ஓடிவந்துள்ளதாகக் கூறினார்கள்.

அன்றிரவு எங்களுக்கு ஓர் எச்சரிக்கை செ... கிட்டியது. அந்த யூதர் எங்கள் வீட்டில் அடைக்க... புகுந்துள்ளதை யாரோ ஜெர்மானிய வீரருக்கு... கூறியுள்ளார்கள். ஆகவே, எங்கள் வீட்டிலுள்ள யூ... அகதிகளுக்கும் எங்களுக்கும் ஆபத்து கிட்டியது.

எங்கள் குடும்பம் பரம்பரையாக, கர்த்தருடை... ஜனமாகிய யூதர்களை ஆதரிக்கும் பண்பு படை... துள்ளது. எம் தந்தையாருக்கு யூதர்களுக்கு உத... செய்வதென்றால் அவ்வளவு ஆர்வம். எங்கள் இ... லம் யூத அகதிகளின் அடைக்கல வீடாகக் கரு... பட்டது.

இச்சமயத்தில் ஒன்பது யூத அகதிகள் இரகசிய ... எங்கள் வீட்டில் வைத்து ஆதரிக்கப்பட்டு ...னர். அடுத்த நாள் அதிகாலையில் யூதர்களுக்கு ...சியமாக உதவியாற்றும் தொண்டர்களில் சிலர் ... இல்லம் வந்தார்கள். அவர்களோடு நான் அளவ ...வி, யூத அகதிகளுக்கு எவ்வாறெல்லாம் அவசர ...வி புரியலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந் ...தேன்.

தொண்டர்களும் யூத அகதிகளும் எங்கள் ...டிற்கு வருவதும் போவதுமாய் இருந்தார்கள். ...ள் இல்லம் ஒரு தேன் கூடுபோல் தோன்றியது. ...க்குத் தெரிந்த மற்ற ஆதரவாளர்களோடு ...லைபேசி கருவி வாயிலாகப்பேசி, அநேக யூத ...திகளுக்கு அடைக்கலம் கிடைக்குமாறு வழி ...க செய்துகொண்டிருந்தேன். இந்த இரண்டாம் ... மகா யுத்தக்காலத்தில் உணவுப் பஞ்சம் வேறு ...விரித்துத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது.

அடைக்கலம் கொடுக்கும் நண்பர்களுக்கு, ...வுப் பங்கீடு கிடைக்குமாறு ஒழுங்கு செய்து ...ண்டிருந்ததேன். இத்தகைய நெருக்கடிகளைத் ...தற்கு எனது நெருங்கிய நண்பர்கள் பலர் பேரு ...புரிந்தனர். 84 வயதுள்ள எனது தந்தையாரும் ...ரும் பணியில் மனமுவந்து கலந்துகொண்டார் ...

எங்கள் வீட்டில் உள்ள சாப்பாட்டு அறையின் ...ட வடிவமான மேசையைச் சுற்றிலும் யூத ...திகள், நெருங்கி இருந்து உணவு உண்பார்கள். ...களும் அவர்களோடுகூட இருந்து அவர்களுக்கு ...தல் கூறி, உணவு அளித்து இன்புற்று வந்தோம். ...ருங்கி இருந்த எங்கள் தோள்மீது ஏறிப் பூனை ஓடி ...யாடுவது வழக்கம். அன்று ஏதோ எங்களை ...றியாமலேயே ஒரு கலக்கம் எங்கள் இல்லம் முழு ...தையும் கவ்வியிருந்தது.

திடீரென்று எங்கள் ஜன்னல் பக்கமாக ஒரு ... சாத்தப்பட்டதைக் கண்டு எல்லாரும் முகம் ...ருத்துப் போனோம். நல்லவேளை அவன் ஒரு ...னல் சுத்தம் செய்யும் தொழிலாளன்தான். எங்கள் ...ன்னலைச் சுத்தம் செய்யும்போதே உள்ளே இருக் ... ஆட்களையும் பளிச்சென்று பார்த்துக் கொண் ...ன். எங்களுக்கு ஒரே பீதிதான்.

ஒருவேளை அவன் துரோகியாக மாறி அந்த ...களையெல்லாம் காட்டிக் கொடுத்துவிட்டால் ... செய்வது? அத்தனை பேர் எங்கள் வீட்டில் ... குழுமியுள்ளார்கள் என்று யாராவது கேட்டால், ...கள் என்ன உத்தரவு சொல்வது?

ஆகவே அந்த யூத நண்பர்கள் என்னுடைய சகோதரியாகிய பெத்சியுடைய பிறந்தநாள் வாழ்த்துக் கூறுவதற்கு வந்தவர்கள்போல நடித்து, "உனக்கு மகிழ்ச்சியான பிறந்தநாள்" என்ற பிரபல பாடலைப் பாட ஆரம்பித்துவிட்டார்கள். அந்த ஜன்னல் சுத்தம் செய்வோன் தூரமாய்ப்போனவுடனே எல்லாரும் கொல்லென்று சிரித்து மகிழ்ந்தோம்.

எத்தனை நாள் இவ்வாறு நாங்கள் ஆபத்தினின்று தப்பி இருப்போம் என்று அதிசயித்துக்கொண்டோம். எப்படியும் ஒருநாள் எங்களுக்கு ஆபத்து கிட்டும் என்று அதனை எதிர்நோக்கி இருந்தோம்.

அதற்காக எங்களை நன்கு ஆயத்தம்பண்ணிக் கொண்டோம். நான் என்னுடைய ஆடையோடு சேர்த்து ஒரு சிறிய வேதாகமத்தை யாருக்கும் தெரியாமல் ஒளித்துவைத்து, இரகசியமாக வைத்து தைத்துக்கொண்டேன். ஒரு பென்சிலை எனது தலைமுடிக்குள் மறைவாக ஒளித்து வைத்துக்கொண்டேன். எப்படியாவது ஒருநாள் திடீரென்று எதிர்பாராத விதமாக ஆபத்து வரலாம் என்று எண்ணினோம்.

இதுகாறும் 80 யூத அகதிகளுக்கு மேலாக எங்கள் வீட்டில் தஞ்சம் பெற்றுத் தப்பிப்போய் இருக்கிறார்கள். எப்பொழுதும் எங்கள் வீட்டில் 12 பேருக்குக் குறையாமல் தங்கி வந்தார்கள். முன்புபோல எங்கள் வீட்டைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க முடியவில்லை.

ஆட்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள். யூதர்களின் உயிரைக் காப்பாற்றுவதுதான் எங்கள் ஒரே நோக்கமாய் இருந்தது. மற்ற வேலைகளைக் கவனிப்பதற்குக்கூட எங்களுக்கு அதிக நேரமில்லை. திடீரென்று நாசிகொள்கையினர் எங்கள் வீட்டைச் சோதனையிட்டால் நாங்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்று அடிக்கடி பயிற்சி செய்துகொண்டோம்.

திடீரென்று நான் ஓர் அவசர ஆபத்து மணி அடிப்பேன். உடனே எல்லா அகதிகளும் எவ்வாறு இரகசிய அறைக்குப்போய் ஓடி ஒளிந்துகொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கற்றுக்கொடுத்தோம். இவ்விதம் நான் அவர்கள் ஆபத்துக்காலத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று அடிக்கடி பயிற்சி கொடுத்து வந்தேன்.

நான் ஆபத்து மணி அடித்தவுடனே அவர்கள் இரகசிய ஒளிப்பிடங்களுக்குப் போய் ஓடி, ஒளிந்து ஒதுங்கிக்கொண்டு தங்களை மறைத்துக்கொள்ளும்

விதத்தைப் பார்ப்பதே ஒரு வேடிக்கையாகத்தான் இருந்தது. எழுபது வினாடிக்குள் அவர்கள் மாயமாய் மறைந்து கொள்வார்கள். ஒரு தடவை "என்னை நெருக்காதே" என்று யூசி தனது யூதத் தொனியில் குசு, குசுவென்று பேசுவது வெளியே கேட்டது.

இவ்விதம் இரகசிய அறையில் ஒளிந்துகொண்டு முணுமுணுக்கக்கூடாது என்று நான் எச்சரிக்கை செய்தேன். அவர்கள் ஒளிப்பிடங்களுக்குச் செல்லுமுன் அவர்களுடைய சாமான்களை வெளியே விட்டுச் செல்லக்கூடாது என்றும் கண்டித்தேன்.

இவ்விதப் பயிற்சி அவர்களுக்குக் கடினமாக இருந்தபோதிலும், இது ஆபத்துக்கு உதவும் என்று நினைத்து நாங்கள் மீண்டும் இந்தப் பயிற்சியைச் செய்து பழக்கப்பட்டோம். அப்பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வெகுமதியாக கிரீம் இனிப்புப் பண்டம் கொடுப்பது வழக்கம். "ஐயோ, கிரீம் இனிப்புப் பண்டம் தின்ன வெகு ஆசையாய் இருக்கிறதே! இன்று இரவு அவசர ஆபத்துக் காலப்பயிற்சி இருக்கும் அல்லவா?" என்று யூசி வேடிக்கையாகக் கேட்பான்.

(தொடரும்)

வாலிபர் பகுதி

The rise and fall of King Solomon

II Chro.1:1 renders thus: *"Solomon, son of David established himself firmly over his kingdom, for the Lord His God was with him and made him exceedingly great"*. Solomon had everything to begin with and lost it as his life drew to a close. Scripture's account of Solomon's life reveals four ways in which the Lord was with him and made him exceedingly great.

God gave Solomon wisdom and knowledge

After Solomon was installed as king, he went to the tabernacle to worship. God spoke to him and said, *"Ask for whatever you want me to give you."* Solomon asked for wisdom and knowledge that he might lead the people. Solomon knew that only wisdom would help him to govern the people. He did not ru impulsively. He began his reign impressive recognizing his need for wisdom above all el

Secondly, God gave Solomon the abili to put his wisdom into action.

The divine wisdom of Solomon did n escape the notice of people near and far. Fro the records of I Kings, we infer that Solom wisely settled the dispute between two wom This is a classic example of Solomon's wisd applied to life. When all Israel heard the verdi the king had given, they held the king in gre esteem, because of his wisdom from God administer justice. Solomon's reputation spre throughout the world in such a way that th God of Israel became known among the natio (II Chro.9:23).

Thirdly, God gave riches and fame Solomon and prosperity and contentment the nation.

According to I Kings 4:20, the people Israel and Judah were great in number. Th ate, then drank and they were happy. The peo enjoyed incredible peace and prosperity wh Solomon ruled. This was the contributing fact to his greatness. Solomon himself amass wealth and honour above other kings.

Fourthly, God gave Solomon the abili to impart his wisdom in creative and lasti ways.

Solomon owed to God a deep sense indebtedness for the talent he possessed. He w a student of the life sciences and natural hist (I Kings 4:33). His knowledge of the flora a the fauna deserves special mention. H described plant life from the cedars of Leban to the hyssop that grows out of walls. He al taught about animals and birds. He had remarkable gift for prolific writing. He h written beautiful songs as well as the sm power–packed pearls of wisdom call

...rbs and Ecclesiastes and Song of Songs. ...capacity for writing speaks volumes for ...empirical knowledge and experience in ...ing avenues of practical life. A prayerful ...sal of the pages of these three books will ...the horizon of your biblical knowledge.

Sad to say, the seamy side of Solomon's ...caused him to fall on evil days. He allowed ...ies of compromises to make inroads into ...relationship with God.

First–Solomon allied himself with ...elievers. In an attempt to smooth out ...rnational relationship, he married the ...hter of the Egyptian Pharaoh (II Kings 3:1) ...the princesses of many other nations. ...ngs 11:1 says that Solomon loved many ...eign women belonging to Moabites, ...monites, Edomites, Sidonians and Hittites. ...Lord had told the Israelites not to marry ... Nevetheless, Solomon held fast to them ...love.

Secondly–I Kings 11:7,8 say Solomon ...a high place for Chemosh, the detestable ...of Moab. He did the same for all his foreign ...es who burned incense and offered ...rifices to their gods. This was an ...mination to the Lord. God was angry ...ause Solomon had turned his heart from the ...Lord.

Third-Solomon did not follow the Lord ...pletely as David his father had done. In ...ger God came to him and said, "Since this is ...r attitude and you have not kept my ...venant and decrees which I commanded you, ...ll most certainly tear the kingdom from you ...Kings 11:11). Solomon started so well, yet ...ed so tragically. He wanted to live his life ...own way, but found himself trapped by his ...n desires. As it was in Solomon's day, so it ...oday. An arrogant attitude of defiance against ...d leads to personal misery. Let us take note ...Solomon's fall and walk in the statutes of ...Lord.

சிறுவர் பகுதி

"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக"

(ரூத் 2:12).

கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே! புதிய வகுப்பில் அடியெடுத்து வைத்திருக்கும் உங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இந்தப் புதிய ஆண்டில் தேவன்தாமே உங்களோடிருந்து, உங்களுக்கு எதிராக வரவிருக்கும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் வெல்ல, பெலன் தருவாராக.

"அம்மா, அம்மா! சீக்கிரம் வாங்களேன். எனக்கு மதியம் சாப்பாட்டுக்குப் பொட்டலம் கட்டிவிட்டீர்களா? மணிஆகிவிட்டதே! இன்று கல்வியாண்டின் முதல் நாள் அல்லவா? என்னோடு பள்ளிக்கு வருகிறேன் என்று நீங்கள் சொன்னீகளே! இந்தப் புதிய பள்ளி எப்படியிருக்கப்போகிறதோ? இயேசு அப்பா! என்னைப் பத்திரமா பார்த்துக்குங்க" என்றாள் திவ்யா. மிகுந்த உற்சாகத்தில் மிதந்துகொண்டிருந்தாள் அவள்.

"சரி, சரி சீக்கிரமாகப் போகலாம்; இன்றுமட்டும்தான் நான் உன்னோடு வருவேன். நாளையிலிருந்து நீயே நடந்துபோய்விடவேண்டும். அதற்காகத்தான் பள்ளியின் அருகிலேயே வீடு பார்த்திருக்கிறோம்" என்று கூறினார்கள், அவள் அம்மா.

திவ்யா நடுத்தரக் குடும்பத்தின் பின்னணியில் காணப்பட்டாலும், வகுப்பில் முதல் தரமாகப் படிப்பவள். அவளை ஒரு சிறந்த பள்ளியில் படிக்கவைக்க வேண்டும் என்று எண்ணினர், அவள் பெற்றோர். நடந்து செல்லும் தூரத்தில் அமைந்த ஒரு புதிய பள்ளியில் அவளைச் சேர்த்தனர். "இந்த முதல் நாளிலே இச்சிறந்த பள்ளிக்கு நான் செல்லுகிறேன்" என்ற பெருமிதத்தோடு வீறுநடைபோட்டாள் திவ்யா.

பள்ளியின் அருகே வந்ததும் அம்மாவிற்கு விடைகொடுத்து அனுப்பினாள் திவ்யா. உள்ளே செல்ல முடியாதபடி விதவிதமான வண்ண வண்ண கார்கள்! அவை உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக இருந்தன. இவளைப்போன்ற ஒரு சில மாணவர்களே நடந்துசென்றனர். மெதுவாக உள்ளே சென்றாள் திவ்யா.

அப்பப்பா! என்னே அழகு! பள்ளிக் கட்டிடத்தின் அமைப்பு அவள் கண்களைக் கவர்ந்தது. ஒரு

வழியாக அவள் வகுப்பைத் தேடிக் கண்டுபிடித்தாள் திவ்யா. வகுப்பின் மாணவ மாணவிகள் அவளை வரவேற்று ஏற்றுகொள்வார்கள் என்று எண்ணின திவ்யாவிற்கு, பெரிய ஏமாற்றமே காத்துக்கொண்டிருந்தது. மெள்ள உள்ளே சென்றாள் அவள்.

உடனே, 'ஓ' என்ற பெரிய சத்தத்தோடு அவளை வளைந்துகொண்டனர் மாணவிகள். ஆங்கிலத்தில் சரளமாகப்பேசி அவளைத் திக்குமுக்காடவைத்தனர். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த திவ்யாவை, பள்ளியின் மணி ஓசை தப்புவித்தது.

மாணவர்கள் கடவுள் வணக்கத்திற்குக் கூடினர். பின்னர், வகுப்பிற்கு வந்த மாணவர்களுக்குப் புது மாணவியான திவ்யாவை, ஆசிரியர் அறிமுகம் செய்துவைத்தார். உணவு இடைவேளையின்பொழுதோ, அத்துணை மாணவ மாணவியரும் அவளைச் சூழ்ந்துகொண்டு, முறைத்தனர்.

"ஏய்! உன்னை very intelligent என்று எண்ணி ஏமாந்துபோகாதே. After all நீ நடந்துதானே வருகிறாய்; ரொம்பவும் அலட்டாதே; இல்லையென்றால் அவ்வளவுதான்!" என்று எச்சரித்தாள் பிரியா. எப்பொழுதும் அந்த வகுப்பில் பிரியாதான் முதல் மாணவியாகத் திகழ்வது வழக்கம்.

அப்படியே மருண்டுபோனாள் திவ்யா! அன்று முழுவதும் நடந்த காரியங்களில் அவள் கவனம் செலுத்தவில்லை. "ஏன் இந்தப் பள்ளியில் சேர்ந்தோம்" என்று திரும்பத் திரும்பத் தன்னையே நொந்துகொண்டாள். ஒருவழியாகப் பள்ளி முடிந்து வீடு திரும்பினாள். அவளது வரவை ஆவலோடு எதிர்பார்த்துகொண்டிருந்த அவள் அம்மா, ஓடிவந்து அவளை அணைத்துக்கொண்டார்கள்.

"திவ்யா! புதுப்பள்ளி எப்படி இருந்தது அம்மா? பாடங்கள் எல்லாம் சுலபமாக இருக்கிறதா? பிள்ளைகள் எல்லாரும் உன்னோடு நன்றாகப் பழகினார்களா?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார்கள்.

ஆனால், திவ்யாவோ அமைதியாக இருந்தாள். என்ன நடந்ததென்று அறியாத அவள் தாயார், அவளுக்குப் பிடித்தமான பலகாரங்களை அவளுக்கு முன்பாகக் கொண்டுவந்து வைத்தார்கள். அவற்றையெல்லாம் ருசிக்கமுடியாதபடி அவள் இருதயம் கனத்திருந்தது. கண்ணீர் மல்க நடந்ததெல்லாவற்றையும் தன் தாயிடம் விவரித்துச் சொன்னாள் திவ்யா. இதனைக் கேட்டு, அதிர்ந்து போனார்கள், அவளது தாயார்.

"திவ்யா! இந்தப் பள்ளியில் உன்னைக் கொ... டுபோய்ச் சேர்த்த கர்த்தர், உனக்கு எல்லாரு... கண்களிலும் தயவு கிடைக்கப்பண்ணுவார் எ... நான் விசுவாசிக்கிறேன். ஆகையால், எதைக் கு... தும் கவலைப்படாமல் பொறுத்திரு மகளே" எ... அவளைத் தேற்றினார்கள்.

அன்று இரவு, அவளது தாயார் ரூத்தின் சரித்... ரத்தை வேத வசனங்களோடு அவளிடம் விள... னார்கள். திவ்யாவின் கண்கள், "ரூத் 2:12 இல்" ப... தது. *"உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்... உனக்குக் கட்டளையிடுவாராக"* என்ற வசன... வாய்விட்டுச் சத்தமாக வாசித்தாள். இஸ்ரவேலி... தேவனாகிய கர்த்தரிடத்தில் தன்னைச் சமர்ப்பி... அவரது செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுந்... திவ்யா. அவள் இருதயத்திற்குள் ஒரு பெரிய சமா... னமும் விசுவாசமும் வந்தது. அன்று இரவு நிம்... யாகத் தூங்கினாள் அவள்.

அந்நாள் முதற்கொண்டு, திவ்யா தன் ... மாணவ மாணவிகளைக் குறித்துக் கவலைப்பட... இல்லை. தன் பாடங்களில் அதிகக் கவனம் செ... தினாள். அந்த மாத இறுதியில் வகுப்புத் தேர்வு ந... தது.

அன்று மதிப்பெண்கள் கொடுக்கப்படும் நா... "நானே முதலிடத்தைப் பெறுவேன்" என்ற ... மிதத்தோடு அமர்ந்திருந்தாள் பிரியா. ஆசிரி... வகுப்பிற்குள் தேர்வுத்தாள்களோடு நுழைந்தா...

"பிரியா, இங்கே வா!" என்று அழைத்தா... ஆசிரியை. பிரியா, மிகப் பெருமையாக எல்லா... யும் சுற்றிப்பார்த்துவிட்டு ஆசிரியரிடம் சென்றா... பிரியாவைப் பாராட்டப்போகிறார்கள் என்று எல்... மாணவர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் அவர்களோ, "என்ன பிரியா! இ... வருடத்துவக்கத்திலேயே நன்றாகப் படிக்காமல், ... செய்கிறாய்? பாடங்கள் கடினமாக இருக்கின்றன... கணக்குப் பாடத்தில் ஏன் இவ்வளவு குறைவா... மதிப்பெண்கள்? கணக்குப்பாடம் விளங்கவில்லை... யென்றால், திவ்யாவைக் கேட்டுத்தெரிந்துகொ... அவள் கணக்கில் நூற்றுக்கு நூறு. அவள் பு... மாணவியாக இருந்தாலும் இந்த முறை அவள் தா... first rank; very good திவ்யா, keep it up" என்... பாராட்டினார்கள்.

பள்ளியின் இடைவேளையின்போது பிரியா... திவ்யாவிடம் வந்தாள்; அவள் கையைப் பிடித்... கொண்டு, "சாரி, திவ்யா! நீ பள்ளிக்கு நடந்து வ... தால், நான் உன்னைத் தரக்குறைவாக நினை...

டேன். நீ என்னைவிட புத்திசாலி என்பதை பித்துவிட்டாய்; எனக்குக் கணக்குப்பாடம் லித்தருவாயா? நான் உன்னுடைய தோழியாக ண்டுமென்று விரும்புகிறேன்; Please, என்னை ரித்து, ஏற்றுக்கொள்வாயா?" என்று கேட்டாள்.

தன் செய்கைக்குத் தக்க பலனைக் கட்டளை கர்த்தரைத் தன் இருதயத்திலே ஸ்தோத்திரித்த ய, பிரியாவோடு கைகோர்த்து நடந்துசென்றாள் யா.

எனது அருமை பிள்ளைகளே! நீங்களுங்கூட அப்பாவின்மீது நம்பிக்கை வைத்து இந்தப் கல்வி ஆண்டில் வாழ்வீர்களானால் உங்கள் கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உங்களுக்குக் ளையிடுவார்.

சாட்சிப் பகுதி

வாஞ்சை நிறைவேறியது

நான் கல்வித்துறையில் அரசாங்க வேலைக்குத் ந்தெடுக்கப்பட்டேன். வேலை நியமனம் னை மாவட்டத்திற்கு வெளியேதான் கிடைக்கும் அது சம்பந்தப்பட்ட அனைவரும் கூறினர். னுடைய குடும்பச் சூழ்நிலையில் வெளிமாவட் திற்கு வேலைக்குச் செல்வது என்பது கடினமான பிரச்சினையாக எனக்குக் காணப்பட்டது. சென் னயிலேயே வேலை நியமனம் கிடைக்க ஊக்க ஜெபித்துவந்தேன். மந்திரிமாரின் நிலையி ள்ளவர்களின் சிபாரிசு கிடைத்தால் மட்டுமே அது டும் என அறிந்தேன். எனினும், "உன்னை அதிச ங்களைக் காணப்பண்ணுவேன்" என்ற வாக்குத்தத் தைக் கர்த்தர் எனக்குத் தந்து, அதிசயமாகச் சென் னையிலேயே வேலையைத் தந்தார். கர்த்தருக்கே மை.

சந்திரகலா, பட்டாளம்.

அற்புத சுகம்

கடந்த ஒரு வருடமாக, எனது கழுத்தின் கீழ்ப் தியின் இடதுபக்கத்தில் எலும்பு வளர்ந்து காணப் தால், வலியாலும், பயத்தாலும் அவதிப்பட்டுக் ண்டிருந்தேன். மருத்துவர்கள் பல சோதனைகள் தும், மருந்து கொடுத்தும், அது குறையவில்லை.

நான் நமது போதகர் சாம் சுந்தரம் ஐயா அவர் டம் ஜெபிக்கக்கோரினேன். அவர் என்னைத் ரியப்படுத்தி ஜெபித்து, ஜெப எண்ணெயும் தார். நான் நமது 24 மணி நேர சங்கிலி ஜெபத்தி லும் இதற்காக ஜெபிக்கக் கோரினேன். விசுவாசத்து டன் மருந்து எதுவும் எடுக்காமல் ஜெப எண்ணெ யைமட்டும் பூசி, பல மாதங்களாக வாக்குத்தத்தங் களை உரிமைபாராட்டி, ஜெபித்து வந்தேன். தூதன் இதழில் சாட்சி எழுதிக்கொடுப்பதாகப் பொருத்த னைபண்ணியும் ஜெபித்தேன்.

கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு, அற்புதமாக அந்த எலும்பு வளர்ச்சி (necrotic nodes) முற்றிலும் மறையும்படியாகச் செய்தார். கர்த்தரே பரிகாரி! அவ ருடைய அற்புதமான வல்லமைக்காக, கிருபைக் காக, கோடாகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கி றேன். ஜெபித்த போதகர் ஐயாவுக்கும் நன்றி கூறுகிறேன்.

ஜோதி தானியேல்

சபையின் செய்திகள்

1. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை உடன் ஊழியர்களின் கூட்டம்

2008, மே மாதம், 2 ஆம் நாள் காலை 10.00 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் உடன் ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

துதி தோத்திரங்களுக்குப் பின்னர், தலைமைப் போதகர், ஊழியர்களுக்குப் பல அறிவுரைகள் வழங் கினார். விசுவாசிகளின் வீடு சந்திப்பு குறித்தும், ஊழியர்களின் விழிப்புணர்வு குறித்தும் பல ஆலோச னைகளை ஊழியர்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர், போதகர் அஜீத்குமார் அவர்கள், ஆதி யாகமம் 18:22 ஐ மையமாகக் கொண்டு, கர்த்தருக்கு முன்பாக ஊழியர்கள் நிற்க, விழிப்புணர்வோடு வாழ வேண்டும் என்று விளக்கினார். ஆபிரகாம் (ஆதி.18: 22), எலியா (1 இராஜா.17:1), பவுல் (அப்.27:23) ஆகிய பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கப் பாத்திரராய் எவ்விதம் வாழ்ந்தனர்? என்பது குறித்து விளக்கினார்.

தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர் கள், 2 நாளாகமம் 22:11 ஐ மையமாகக்கொண்டு, அசதியாக—நிர்விசாரமாக—வாழ்ந்தால் கர்த்தருக்கு முன்பாக ஊழியர்கள் விழிப்புடன் நிற்கமுடியாது என்றும், ஜெபமாகிய தூபத்தை ஏறெடுக்க முடியாது என்றும் விளக்கினார்.

ஊழியர்கள் தங்களது அசதி—விழிப்பின்மை—நிர்விசாரம்—ஆகியவை நீங்க, தங்களைப் புதிதாக

அர்ப்பணித்து ஜெபித்தனர். தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

2. விடுமுறை வேதாகமப்பள்ளி

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில், இவ் வாண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் தொடங்கி 10 நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெற்றது. இப்பள்ளியில் விசுவாசிகளின் பிள்ளைகளும், புறஜாதியாரின் பிள்ளைகளுமாகச் சேர்ந்து, சுமார் 650 மாணவ மாணவிகள் பயிற்சி பெற்றனர்.

இப்பள்ளியில் ஆரம்ப வகுப்புமுதல் உயர் வகுப்புவரை, மாணவ மாணவிகள் வேதாகமத்தைக் குறித்துள்ள கல்வி பயின்றனர். இவ்வாண்டு விடுமுறை வேதாகமப் பள்ளியின் இலக்கு, "இயேசுவை நோக்கிப்பார்" என்பதாகும்.

இப்பள்ளியில் இயேசுவுக்காகச் சேவை செய்யும் நோக்கத்தோடு 60 ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வேதாகமத்தைப் பயிற்றுவிக்க முன்வந்தனர்.

இப்பள்ளியின் 8 ஆம் நாள், "அன்பு விருந்து" நடந்தது. அப்போது மாணவ மாணவிகள் ஒருவரோடொருவர் தங்களது உணவைப் பகிர்ந்து உண்டு, தாங்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை, நிரூபித்தனர். இவ்வேதாகமப் பள்ளியின் வாயிலாக இயேசுவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அந்நியபாஷை அடையாளத்தோடு பெற்றுக்கொண்டவர்கள் 169 பிள்ளைகள் ஆவர்.

இப்பயிற்சியின் இலக்கைக் குறித்துள்ள போதகம், ஓவியம், கட்டுரை, பாடல்கள் இவற்றிற்கான போட்டிகள் அனைவும் இந்நாட்களில் மாணவர்களிடையே நடைபெற்றன. அநேக மாணவ மாணவிகள் பரிசுகளைத் தட்டிச்சென்றனர். வகுப்புகளைச் சிறந்த முறையில் நடத்தின ஆசிரியர்களுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

கடைசி நாளான மே மாதம் 4 ஆம் நாள், விடுமுறை வேதாகமப்பள்ளியின் முடிவு விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம், மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட இலக்கைக்குறித்துள்ள குறுநாடகங்கள், பாடல்கள் இவற்றை மிகுந்த மகிழ்சியோடு பாடிக்கொண்டாடினர்.

விடுமுறை வேதாகப்பள்ளியின் வாயிலாக இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!

News

தகவல் தொழில் நுட்பத்துறையில் தமிழக[ம்] அதிவேக வளர்ச்சி

தமிழகத்தில் 37 தொழில் நுட்பவியல் ம[ற்று] சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 122[…] ஹெக்டேரில் அமைய உள்ளது. இதற்கு மத்திய[…] சும் அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் 19 சிற[ப்பு] பொருளாதார மண்டலங்கள் செயல்பாட்டி[…] தொடங்கிவிட்டது. 121.14 ஹெக்டேரில் [...] சிறப்புப் பன்முகப் பொருளாதார மண்டலத்தி[…] 2192.44 ஹெக்டேரில் 2 பன்முக உற்பத்திப் பொ[…] சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும், மு[…] யான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மே[…] 464.45 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்[…] மின்னணு வன்பொருள், மென்பொருள் மற்றும் [...] சம்பந்தப்பட்ட சேவைகளுக்கான 6 சிறப்புப் பொ[…] ளாதார மண்டலங்கள் முறையான அங்கீகாரம் [...] றுள்ளன.

சென்னைக்கு அருகில் தரமணியில் உ[…] தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் பூ[…] அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு, 26.64 [...] நிலப்பரப்பில், 4.5 மில்லியன் சதுர அடி பரப்[…] வுக்கு, கட்டடத்துடன் கூடிய தகவல் தொழில்நு[…] வியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமை[…] பதற்கு, தமிழக அரசின் நிறுவனமான டிட்கோ நி[…] வனம், டி.எல்.எப். நிறுவனத்துடன் கூட்டு மு[…] மேற்கொண்டுள்ளது.

சென்னை தரமணியில் உள்ள 25.27 ஏ[…] நிலப்பரப்பில், டிட்கோ நிறுவனம் தகவல் தொ[…] நுட்பவியல் பூங்கா மற்றும் ஒருங்கிணைந்த ச[…] தேச கன்வென்ஷன் மையம் அமைத்து வருகிற[…]

சென்னைக்கு அருகில் உள்ள சோழிங்கநல்[…] ரில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் தக[…] தொழில் நுட்பவியல் பூங்கா உருவாக்கப்பட[…] ளது. சிறுசேரி, சிப்காட் வளாகத்தில், தகவல் தொ[…] நுட்பவியல் பூங்கா அமைக்கும் பணி வேக[…] நடைபெறுகிறது. இப்பூங்காவில் தகவல் தொ[…] நுட்பவியல் மற்றும் அதைச் சார்ந்த சேவைக[…] கான 58 நிறுவனங்கள் தங்களுடைய பணியிட[…] அமைக்கவுள்ளன.

தினமலர் 13.05.[…]

அமைதியான நேரம்

றைவா! நான் துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கிறேன், தயவாய் உதவும்,"

த்திச் செவிசாய்க்கையில்

எவ்விதத்தில் நம்புகிறாய்?" என்ற இறைவனின் வினாவைக் கேட்டேன்.

ஒரு விடைகாண விழையும் நேரத்தில் எழுப்பப்பட்ட ஒரு வினா.

றைவா! நீர்தான் ஒரே உண்மையான தெய்வம், எங்களைப் படைத்தவர், வல்லவர்,

மையானவர், தூயவர், நேர்மையானவர், அன்பில் நிறைந்தவர்,

வராயினும் இரக்கமுள்ளவர்..."

ய்! என்னைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?"

நான் கூறிக்கொண்டிருந்ததை இடைமறித்தது;

தனித்தன்மை என் உள்ளத்தின் ஆழத்தைத் தொட்டது.

களில் கண்ணீருடன்,

யத்தை இறைவனிடம் எப்படிக் கண்டுகொண்டேன் என்பதைக் கூற ஆரம்பித்தேன்.

என்னை விடுதலையாக்கிற்று,

நால் காட்டிய அன்பு என்னை நிரப்பிற்று,

த்தங்கள் எந்நிலையிலும் நிரூபிக்கப்பட்டன.

தப் பிரதிபலனுமின்றிக் கிருபை பொழியப்பட்டது,

கெம்பீரம் உயரத்திற்கு உயர்த்திற்று,

ஒரு நிலைத்திருக்கும் நண்பன் என்பதை மறுதலிக்க முடியாது.

றவன் இங்கிருப்பதால் உதவியும் இருக்கிறது.

திருப்தியடைந்து விட்டேன்.

Reg. Number TN/CCN/203/06-08. Licence to the post under WPP No.TN/CCN/85/06-08
Regd. Under Regis. of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication : monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai-600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
10. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
11. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
12. தசமபாகம் கர்த்தருக்குரியது
13. Jesus Met Me in Jail
14. Spiritual Truths from the Bible
15. Tithe Belongs to God

Book-Rs.10/-

16. அநாதி கிருபை
17. கர்வாலி மரம்
18. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
19. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
20. நீதிமான்கள்
21. கிறிஸ்துமஸ் செய்திகள்
22. இயேசு உயிர்த்தெழுந்தார்
23. நீதியின் சூரியன்
24. பரதேசிகளாகிய நாம்
25. கிறிஸ்துவ குடும்பம்
26. நித்திய பிரதான ஆசாரியர்
27. சபை சபைதானா?
28. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
29. புத்தாண்டு தேவசெய்திகள்
30. விழித்திரு
31. சிலுவைக்கு அப்பால்
32. வணக்கம்
33. இரட்சிப்பின் சாட்சிகள்
34. ஜீவனுள்ள சாட்சிகள்
35. அற்புத சாட்சிகள்
36. சாட்சிகள்
37. எரி நரகத்திற்குத் தப்பினேன்
38. மாபெரும் மாற்றம்
39. நன்றியுள்ள சாட்சிகள்
40. கல்லூரியில் அற்புதங்கள்
41. நற்செய்தி கதைகள்
42. தீப ஒளி
43. வழிகாட்டும் கதைகள்
44. அந்தக் கடிதங்கள்
45. அந்த மயில்கள்
46. கனமான ஊழியம்
47. வெளிச்சம்
48. ஆத்தும நேசர்
49. ஐக்கியம்
50. கொடி
51. இன்னும் சந்தேகமா?
52. அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
53. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
54. மேய்ப்பரின் அறிவுரைகள்
55. முதலாம் ஆதாம்
56. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
57. நீரே என் மேய்ப்பர்
58. தேவ ஊழியம்
59. உத்தம ஊழியன்
60. Eternal Grace
61. The Star
62. The New Year
63. Spiritual Questions
64. The Timely Warning
65. The Blessing
66. Your Response to the Cross
67. The Power of Prayer
68. Springs in the Valley
69. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

70. ஏழு வார்த்தைகள்
71. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
72. இயேசு கூறின உவமைகள்
73. அதிசயமான தேவகிருபை
74. Amazing Grace of God

Book - Rs.20/-

75. என் நேசரின் சத்தம்
76. தேவனுடைய வாக்குத்தத்த செய்திகள்
77. வாக்குத்தத்த செய்திகள் 2004
78. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
79. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
80. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
81. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
82. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
83. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
84. ஒருவருக்கொருவர்
85. Successful Ministers of the Lord
86. Messages of God's Blessings 1
87. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

88. A Good Soldier of Jesus Christ
89. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
90. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
91. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
92. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
93. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
94. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

95. நல்ல போர்ச்சேவகன்
96. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line:
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website:www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079